விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 32 புதன்கிழமை (17.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கிறீஸ் பூதம் பின்னணியில் கோத்தபாய ராஜபக்ஷ

## அடித்துக் கூறுகிறார் மங்கள



(கொழும்பு)

படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவிற்கமைய படைத்தரப்பின் புலனாய்வுத்துறையினரே மர்ம மனிதர்களின் (கிறீஸ் பூதம்) பின்னணியில் இருக்கின்றனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவைக்கு நிபுணர் குழுவின் அறிக்கை அனுப்பவில்லை

(கொழும்பு)

நிபுணர் குழு அறிக்கை ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான்கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

எனினும் இது குறித்த அறிக்கையை அனுப்பி வைப்பதற்கு இன்னமும் கால அவகாசம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழு அறிக்கை ஒரு பொதுவான ஆவணமாகும் எனவும் இந்தத் தருணத்தில் குறித்த அறிக்கை மனிதவுரிமை ஆணைக் குழுவில் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உறுப்பு நாடுகள் குறித்த அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்படும்.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் உறுப்பு நாடுகள் உன் (20ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் காவலரணுக்குள் ஓடி மறைந்த மர்ம மனிதன்

### மட்டு. புதூரில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதூரில் கடந்த திங்கட்கிழமை இரவு நடமாடியதாக தெரிவிக்கப்படும் மர்ம மனிதர்களை பொதுமக்கள் துரத்திச் சென்றபோது அம் மர்ம மனிதர்கள் சேத்துக்குடா பொலிஸ் காவலரணுக்குள் ஓடி ஒளித்துக் கொண்டதைத் கண்டித்து அப் பகுதி மக்கள் புதூர் விமான நிலையத்திற்கு அருகாமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவகீதா பிரபாகரன், மண்முனைப் பற்று பிரதேச சபைத் தவிசாளர் சசிதரன் கிரிஸ்ரினா, வவுணதீவு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கே.விமலநாதன், மாநகர சபை உறுப் (20ஆம் பக்கம் பார்க்க)

புதூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது....



## மாலைத்தீவு ஜனாதிபதி இலங்கை வருகை



(கொழும்பு)

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட் நேற்று இலங்கைக்கு விஜயம்செய்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று பகல் 11.00 மணியளவில் இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் நஷீட்டை இலங்கையின் வெளி (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நாடாளுமன்றில் இலங்கை விவகாரம்

### அமளிதுமளி: சபை ஒத்திவைப்பு

(டில்லி)

இலங்கை தமிழர்களின் மீள் குடியேற்றம் உள்ளிட்ட அவர்களது அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து இந்திய நாடாளுமன்றில் விவாதம் ஆரம்பமாகியபோதும் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மீரா குமார் தலைமையில் குறித்த விவாதம் நேற்று நண்பகல் 12.05 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் விவாதத்தை அ.தி.மு.க. உறுப்பினர் ஆரம்பித்து வைத்து உரையாற்ற முற்பட்ட வேளையில் ஆளும் தரப்பினர் உள்ளிட்டோர் கூச்சலிட்டதனால் இந்திய நாடாளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டது.

இதனையடுத்து சபாநாயகர் மீரா குமார் நாடாளுமன்ற நடவடிக்கைகளை இன்று முற்பகல் 11.00 மணிவரை ஒத்திவைத்துள்ளார். (ந-5)

## யாழ்.பஸ் நிலையத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

உதயன் பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். பஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

கொழும்பைத் தளமாகக் கொண்ட ஐந்து ஊடக அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் பலர் குகநாதன் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம், உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லிம் மீடியா போரம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவற்றைச் சேர்ந்த ஊட (20ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற ஆதாரங்களை தொடர்ந்தும் வெளியிடுவோம்

### ஹெட்லைன்ஸ் ருடேயின் பிரதம ஆசிரியர் செவ்வி

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் தம்மிடம் இருக்கின்ற நம்பத் தகுந்த ஆதாரங்களை தொடர்ந்தும் வெளியிடுவோம் என இந்தியாவின் ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சியின் பிரதம ஆசிரியர் ராகுல் கன்வால் தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலையின் கண்கண்ட சாட்சி- இலங்கையின் கொலைக்களம் என்ற ஆவணப்படத்தை ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சி கடந்த வாரம் ஒளிபரப்பியிருந்தது.

இந்த ஆவணப்படம் தொடர்பாக ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சியின் பிரதம ஆசிரியர் ராகுல் கன்வால், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து தனது செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னிக்கு நேரில் விஜயம் செய்த எமது நிருபர் பிரியம்வதா, இறுதிக்கட்டப் போரில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து விபரங்களைச் சேகரித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மண்ணில் ஓராம் ஆண்டு வெற்றியுடன் வீறு நடைபோடும் நவீன் செராமிக்



Metro Engineering (Pvt) LTD
No.212, Palaly Rd, Jaffna. 021 222 0044 / 021 222 0033
No.05, Stanly Rd, Jaffna. 021 222 4777 / 021 222 4888

வர்த்தகப் பெருமக்களே...

உங்கள் வியாபார, கல்வி நிறுவனங்கள் குறுகிய காலத்தில் கம்பனிப் பதிவாளர் நாயகம் காரியாலயத்தில் தனியார் கம்பனியாக பதிவு செய்து தரப்படும்.

VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-3
072 9994777 / 011 7902938

# கிறீஸ் பூதம் வதந்தி பரப்பினால் கைது

(கொழும்பு)

கிறீஸ் பூதம் தொடர்பாக வதந்திகளைப் பரப்புவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ்மா அதிபர் எம்.கே.இலங்ககோன் கூறியுள்ளார். கம்பளைப் பகுதியில் இத்தகைய வதந்திகளைப் பரப்பிய ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. அப்பகுதியில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். கிறீஸ் பூதமாக தம்மைக் காட்டிக்கொண்ட 47 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

FINANCIAL SPONSOR
for Student Visa
any country
VTL Management (Pvt) Ltd
Colombo - 3.
072-9994777/011-7902938

# முருகன், சாந்தன், பேறிவாளன் தொடர்பில் இந்திய அரசுக்கு கடிதங்களை எழுதுங்கள்

## சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுமரணதண்டனையை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் மீதான மரணதண்டனையை நீக்குமாறு கோரி கடிதங்களை இந்தியப் பிரதமர், ஜனாதிபதி, உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு செப்ரெம்பர் 26ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் கருணைமனு மீது முடிபெடுக்க ஏற்பட்ட 11 வருட தாமதமும் மரணதண்டனையை எதிர்பார்த்து நீண்டகாலம் காக்க வைக்கப்பட்டமையும் மனித தன்மையற்ற ஒரு செயலாகும் என மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள ஊடக அறிக்கையில்தெரிவித்துள்ளதாவது,

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூவர் வேலூர் சிறையில் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர். இந்திய குடியரசுத் தலைவரினால் இவர்களின் கருணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் இத் தண்டனை அமுலாக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கான தண்டனை நிறைவேற்றப்படுமானால் இதுவே 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிறைவேற்றப்படும் முதல் மரண தண்டனையாக இருக்கும்.

முருகன், சாந்தன், பேரறிவாளன் போன்றோருக்கு 1998ஆம் ஆண்டு தடா சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களது மரண தண்டனையை 1999ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றமும் உறுதிப்படுத்தியது. இந்திய அரசின் பரிந்துரையின் பேரில் இந்திய குடியரசுத் தலைவர் இவர்களது கருணை மனுவை நிராகரித்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபைக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

தற்போது மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள இம் மூவர் உட்பட 26 பேருக்கு தடா சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பூந்தமல்லி சிறப்பு நீதி மன்றம் மரண தண்டனையை வழங்கியிருந்தது. இந்த தடா சட்டமானது ஒரு நியாயமான விசாரணையை முன்னெடுப்பதற்குரிய சர்வதேச தரத்துடன் அமைக்கப் பட்டதல்ல.

இவ் வழக்கின் மேன் முறையீட்டின் போது 3 நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்றம் இவ் 26 பேரில் 4 பேரின் மரண தண்டனையை உறுதி செய்ததுடன் 19 பேரின் மரணதண்டனையை நீக்கியும் மேலும் மூவரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தும் தீர்ப்பளித்திருந்தது.

2000 ஆண்டு தமிழ் நாடு ஆளுநர் மரண தண்டனை் விதிக்கப்பட்ட நால்வரில் நளினியின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்ததுடன் மற்றைய மூவரின் கருணை மனுக்களை நிராகரித்திருந்தார். இந் நிலையில் இவர்களின் கருணை மனுக்கள் 2000ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு தற்போது முடிபு வெளியாகியுள்ளது.

சர்வதேசமன்னிப்புச் சபையானது மரணதண்டனைகளுக்கு எதிரானது. மரண தண்டனையானது மனிதத் தன்மையற்ற ஒரு கொடூரமான செயலாகவே மன்னிப்புச்சபை கருதுகிறது. கருணைமனு மீது முடிபெடுக்க ஏற்பட்ட 11 வருட தாமதமும் மரணதண்டனையை எதிர்பார்த்து நீண்டகாலம் காக்க வைக்கப்பட்டதும்மனிதத்தன்மையற்றஒருசெயலாகும். இந்திய உச்ச நீதிமன்றம் இந்த தாமதத்தை காரணம்காட்டியே பல சந்தர்ப்பங்களில்மரணதண்டனையை நீக்கி உத்தரவிட்டிருக்கிறது.

இந் நிலையில் முருகன், சாந்தன், பேரறிவாளன் மீதான மரண தண்டனையைக் நீக்குமாறு வேண்டும் கடிதங்களை இந்தியப் பிரதமர், ஜனாதிபதி, உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு செப்ரம்பர் 26ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குப்படி சர்வதேச மன்னிப்புச்சபை கேட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கின் தீவிரத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம் கருணைமனு மீதான தீர்ப்பை எதிர்பார்த்து 11 வருடங்கள் காத்திருக்க வைத்தமை குறித்தும் இக்கடிதங்களில் குறிப்பிடும்படி மன்னிப்புச்சபை கேட்டுள்ளது. (ந-5)

# பெண்ணை கத்தியால் குத்திய கிறீஸ் பூதம் மட்டக்களப்பில் நீடிக்கும் நிட்டூரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுவான்கேணியில் நேற்று முன் தினம் இரவும் பெண் ஒருவர் மீது மர்ம மனிதர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

களுவான்கேணிக் கிராமத்திற்கு நேற்று முன்தினம் இரவு சென்ற மர்ம நபர்கள் அப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் மீது கையில் வைத்திருந்த கூரிய ஆயுதத்தால் குத்தியுள்ளனர். இதனால் காயமடைந்து மயங்கிவிழுந்த அந்தப் பெண்ணை கிராம மக்கள் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

தொடர்ச்சியாக நான்கு நாட்களாக இக் கிராமத்தில் மர்ம மனிதர்களின் பதற்றம் நீடிப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் வந்தாறுமூலையில் உள்ள வியாபார நிலையத்தின் உரிமையாளர் ஒருவர் மீதும் மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வந்தாறுமூலையில் உள்ள தனது கடையிலிருந்து வெளியில் வந்த குறித்த நபர் மீது வீதியில் மறைந்திருந்த மர்ம மனிதர்கள் மூவர் அவரின் வயிற்றில் கத்தியால் குத்திவிட்டு ஓடிச் சென்றுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த கடை உரிமையாளர் தற்போது மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ந-5)

# இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் ஐ.தே.கட்சி ஆட்சியை கைப்பற்றும்

## ஆருடம் சொல்கிறார் ரணில்



(கொழும்பு)

இன்னும் 2,3 வருடங்களில் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கியதேசியக் கட்சி கைப்பற்றும் என அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதெரிவித்துள்ளார். 2009இல் ஐக்கிய தேசியக் கட்சியை முன்னோக்கிய பாதைக்கு இட்டுச்சென்றது போல எதிர்காலத்திலும் செயற்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு கூட்டம் இன்று கூடவுள்ளது. வேட்புமனு குழுவின் மூலம் வேட்பாளர்களை தெரிவு செய்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஆராயவுள்ளோம் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இன்று அனுமதி அளிக்கப்படவுள்ளது. அதைமட்டுமே நாங்கள் செய்வோம்.

சிறியகாலத்தைவைத்துக்கொண்டு வேட்புமனு சபையை இன்று நிறுவ முடியாது. அப்படி செய்தால் மகிந்த ராஜபக்ஷவே அதன் மூலம் நன்மையடைவார். நாங்கள் கூடி கட்சி யாப்புக்கு அமைய செயற்படவுள்ளோம்.

எனவே யாரையும் நாளை கொழும்புக்கு வருமாறு நாம் அழைப்பு விடுக்கவில்லை ஐக்கிய தேசியக் கட்சி சத்தியாக்கிரகம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக தொலைக்காட்சி ஒன்றில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி சத்தியாக்கிரகம் எதனையும் ஏற்பாடு செய்து மக்களை கஷ்டத்திற்கு உட்படுத்த விரும்பவில்லை.

2009ஆம் ஆண்டு நான் இந்த கட்சியை முன்கொண்டுவந்தேன். அதே போல் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் நாம் ஆட்சி அதிகாரத்திற்கு வருவோம்.

அதற்காகவே நாம் தயாராகிறோம். மக்களின்பிரச்சினையைதீர்க்க இந்த அரசாங்கத்திற்கு முடியாது. இது ஒரு கட்சி சார்பாக செயற்படும் அரசாங்கம் என்றார். (ந-5)

காரைநகர் அபிவிருத்திச் சபை மற்றும் கனடா காரை கலாசார மன்றம் ஆகியவற்றை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

சமூக, சமய, அறப்பணிகளுடன், கல்விப் பணியையும் மேன்மையுற முன்னெடுக்கும் காரை. அபிவிருத்தி சபையினர் 2011 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் எம் மாணவர்களுக்கான 11 (பதினொரு) பயிற்சிப் பரீட்சைகளையும், வழிகாட்டல் கருத்தரங்குகளையும் நடத்தி, மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கி ஊக்கப்படுத்திய நற்பணியைப் பாராட்டுவதுடன் அவர்கள் பணி மேலும் தொடரவும், சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

தீவக கல்விவலய எல்லாப் பாடசாலைகளுக்கும், இப் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களை பெரு மனதுடன் வழங்கி உதவிய காரை அபிவிருத்திச் சபைக்கும், நிதிவழங்கிய கனடா கலாசார மன்றத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்து மகிழ்வடைகின்றோம். 21.08.2011 அன்று பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களையும் சித்திபெற வாழ்த்துகின்றோம்.

கல்விக்கோட்டம் காரைநகர்
தீவகவலயக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டப் பாடசாலை அதிபர்கள்.
(சி-4067)

தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் கர வருடம் ஆடி மாதம் 24-ம் நாள் (09.08.2011) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

நல்லூர், "கலாநிதி, சிவாகம திலகம்"
சிவஸ்ரீ கந்ததாசக் குருக்கள் சச்சிதானந்தக் குருக்கள்
(வேலம்பிராய் கண்ணகை அம்மன் கோவில் பிரதம குருவும் தர்மகர்த்தாவும்)

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

18.08.2011 வியாழக்கிழமை 10.00 மணிக்கு தசாகம்
19.08.2011 வெள்ளிக்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
20.08.2011 சனிக்கிழமை சபிண்டீகரணம்
21.08.2011 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு கிருஹயக்ஞம்

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நன்றி

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை
(5928)
இங்ஙனம்
குடும்பத்தினர்

வீடு விற்பனைக்கு

சுதுமலைதெற்கில்நல்லசூழலில் உடன் குடிபுகக்கூடிய வீடொன்றும் சற்றுகுறையாக உள்ள வீடொன்றும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : K.சீவறட்ணம்
C/O K.குணறட்ணம்
57/16 றிஜிஸ்ரார்
சம்பந்தர் ஒழுங்கை
சுதுமலை தெற்கு
(5924)

வந்து பாருங்கள் - ஏமாறாதீர்கள்

கன்று வாங்குபவர்கள் இங்கு வந்து பாருங்கள். வெயில்காலத்திலும் நிலத்திலும் பெரிய சாடிகளிலும் எவ்வளவு குளிர்மையாக எமது வேப்பிலை பசளை மருந்தின் மூலம் றோஸ்கன்றுகள் வளர்ந்திருக்கின்றன. இக் கன்றுகள் எமது திருநெல்வேலி மண்ணில் யாழ்.நகர வெக்கைக்கு ஏற்ற றோஸ் தடியில் ஒட்டி உண்டாக்கப்பட்டவை. மருந்தும் கொடுத்து வளர்க்கும் முறைகளும் அறிவிக்கப்படும். வீதி ஓரத்தில் பெரிய பூவுடன் ஆசைகாட்டி விற்பனையாகும் கன்றுகளை வாங்கி ஏமாறாதீர்கள். பெரிய Bagக்கில் நன்கு வேர்விட்டு வளர்ந்த றோஸ் கன்றுகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

கிருஷ்ணா பாம்: தலங்காவில் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு.
(5926)

# இனி, மூளை வளராது?


மனித மூளை அதன் முழு அறிவுத் திறனை எட்டிவிட்டது. இனி அது வளர்வதற்கு வாய்ப்பில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் சைமன் லாலின் தலைமையிலான குழு, இது தொடர்பான ஆய்வை மேற்கொண்டது. இக்குழு கூறு கையில், தற்போதைய நிலையைத் தாண்டி மனிதமூளைமேலும் புத்திசாலித்தனம் அடைய இயலாது. காரணம், அதற்குத் தேவையான கூடுதல் சக்தியையும், ஒட்சிசனையும் மனிதர்களால் கொடுக்க முடியவில்லை என்கிறது.

மூளையின் அமைப்பையும், அதன் செல்கள் எவ்வளவு சக்தியை பயன்படுத்துகின்றன என்பதையும் அலசி ஆராய்ந்து பின்னர் ஆய்வாளர்கள் இந்த முடிபுக்கு வந்துள்ளனர்.

மூளை செயற்படுவதற்கு சக்தியை எடுத்துக்கொள்கிறது என்பதையும், அதுவே மூளையின் திறனையும், வடிவமைப்பையும் வரையறுக்கிறது என்பதையும் நாங்கள் செயல் விளக்கமாக எடுத்துக்காட்டியுள்ளோம். கிடைக்கும் சக்தி குறையும்போது நமது மூளையால் கூடுதலாகச் செயற்பட முடிவதில்லை என்கிறார் லாலின்.

மூளையின் நரம்பு அமைப்பு மேலும் திறன் கூடிய விதத்தில் செயற்படுவதற்கு அதிகளவிலான சக்தி தேவை. ஆனால் அதை மனிதர்களால் அழிக்கமுடியாது என்பதால் மூளை இன்னும் கூர்மையாகும் என்று கூறமுடியாது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.



மூளையில் ஒன்றுடன் ஒன்றிணைந்துள்ள பல்வேறு பகுதிகளுக்கு இடையிலான துடிப்புகளின் வேகத்தை ஆய்வாளர்கள் அளவிட்டார்கள். அப்போது, புத்திசாலியான நபர்களுக்கு அந்தத் துடிப்புகள் வேகமாகவும், மந்தமான நபர்களுக்கு அந்தத் துடிப்புகள் சற்று மெதுவாகவும் செல்வதைக் கண்டுபிடித்தார்கள்.

மூளை வலைப்பின்னல் அமைப்புக்குள் நல்ல பரிமாற்றம் இருக்கும்போது அத்தகைய நபரின் அறிவுத்திறனும் சிறப்பாக இருக்கிறது. ஒருவர் புத்திசாலியாவதற்கு, மூளைப் பகுதிகள் இடையே நல்ல தொடர்பு அவசியம் என்று புரிகிறது. ஆனால் சக்தி நரம்புகளுக்குத் தேவையான இடம் போன்றவை மேற்கண்ட நிலையை ஓர் அளவுக்குள் கட்டுபடுத்திவிடுகின்றன என்று ஆய்வுக்குழு உறுப்பினரான எட்பல் மோர் கூறுகிறார்.


## தண்ணீரில் நடக்கும் ரோபோ!

தண்ணீரில் நடக்கவும், ஓடவும் ரோபோவை விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

வாட்டர் ஸ்ட்ரைடர் என்ற நீண்ட கால்கள் தண்ணீர்ப் பூச்சி, குளம், ஏரி மற்றும் ஆற்று நீர்ப்பரப்பில் சர்வ சாதாரணமாக ஓடித் திரியும். அதைப் போலவே செயற்படுகிறது விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கும் புதிய மைக்ரோ ரோபோ.

இதுபோன்ற தானியங்கி அமைப்பை உருவாக்க ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்கின்றன என்றாலும் புதிய ரோபோ மேம்பட்டது.

பலவகையிலும் தனிச்சிறப்பு வாய்ந்தது என்பதால் இதை இராணுவ உளவு வேலைகள், நீர்நிலைகளில் மாசு கண்காணிப்பு போன்ற பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்



ளலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

தண்ணீரில் நடக்கும் ரோபோ அதிசயத்தை நிகழ்த்தியிருப்பவர்களின் தலைவர், ஸீஜியாங் பல்கலைக்கழக வேதிப் பொறியியல்துறை இணைப் பேராசிரியரான கின் மின்பான். அவர் கூறுகையில், தண்ணீரில் நடப்பது என்பது மனிதர்களின் நீண்டநாள் கனவு. ஆனால் சில நீர்வாழ் பூச்சியினங்கள் அதை வெகு இயல்பாகச் செய்துவருகின்றன. தண்ணீர் எதிர்ப்புத்திறன் (சுப்பர்ஹைட் ரோபோபிக்) கொண்ட கால்களாலே எமது ரோபாவால் தண்ணீர் மீது நடக்க முடிகிறது என்கிறார்.

390 வாட்டர் ஸ்ட்ரைடர் பூச்சிகளுக்கு இணையான எடை கொண்ட தங்கள் ரோபோவை பார்ப்பவர்கள், இது தண்ணீரில் மூழ்கிவிடும் என்று தான் நினைப்பார்கள். ஆனால் இது எளிதாக தண்ணீரில் மிதப்பதைப் பார்க்கும்போது அதிசயித்து விடுவார்கள் என்கிறார்கள் இதன் பிரம்மாக்கள்.




JANASHAKTHI
FULL OPTION
வாழ்க்கைப் பயணத்தின் வழித்துணை

அழகானதோர் வாழ்க்கை உங்களுக்கும் உள்ளது
அது எமக்குப் புரிகிறது....

மற்றைய வாகனங்களுக்குக் கிடைக்கும் புல் ஒப்ஷன் சேவையினைப் போன்றே, மோட்டார் சைக்கிள் செலுத்தும் உங்கள் வாழ்க்கைக்கும் வேறெந்த காப்புறுதிகளிலும் கிடைக்காத அரிய வாய்ப்புகள் ஏராளம். உங்களுடனும் உங்கள் குடும்பத்தினருடனும் வழித்துணையாக வர ஜனசக்தியிலுள்ள நாம் தயாராகவுள்ளோம்.

- மோட்டார் சைக்கிள் செலுத்துகையில் அகால மரணம் ஏற்பட்டால் ரூ.100,000/-
- ரூ. 50,000/- வரை வைத்தியசாலைக் கட்டணம்
- தலை கவச பாதுகாப்புக் காப்புறுதி - இலவசம்
- திடீர் விபத்து நேரிட்டால் ரூ. 100,000/- (காப்புறுதியாளருக்கு)

- 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை
- விபத்து நடந்த இடத்திலேயே அங்கீகாரம்
- நாடளாவிய கராஜ் வலையமைப்பு
- மேலும் பல சலுகைகள் ஏராளம்

அழையுங்கள் 0112 303 300

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ஜனசக்தி இன்சூவரன்ஸ் பீஎல்சீ. (பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம்)

JANASHAKTHI INSURANCE

# இரணைமடுக்குளத்திலிருந்து யாழிற்கு குழாய்மூலம் நீர் வழங்கும் திட்டம்

## 164 மில்லியன் டொலர் ஒதுக்கீடு

இரணைமடுக்குளத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கு குழாய்மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கு 164.04 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ,

யாழ்.குடாநாடு முழுவதும் நீர் வழங்கும் பாரிய திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்மூலம் எதிர்காலத்தில் யாழ். குடாநாட்டில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதை தடுத்து நிறுத்த முடியும்.

யாழ்.குடாநாட்டில் யாழ்ப்பாணம், கொடிகாமம், கரவெட்டி, சாவகச்சேரி, கோப்பாய், அச்சுவேலி, சண்டிலிப்பாய், சங்கானை ,நல்லூர், எழுவைதீவு, மூளாய், பளை, புங்குடுதீவு, கைதடி, அனலைதீவு, பூநகரி, அரியாலை, காரைநகர், வட்டுக்கோட்டை ஆகிய பிரதேசங்களில் நீர்த்தாங்கிகள் அமைக்கப் பட்டு குடிநீர் விநியோகமும் இடம்பெற திட்டமிடப் பட்டுள்ளது.

குளத்தினை ஆழப்படுத்தி திருத்தும் வேலைகள் தற்போது இடம்பெற்று வருவதோடு அணைக்கட்டை உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைய உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# தூக்கில் தொங்கிய நிலையில் முதியவரின் சடலம் மீட்பு

தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 11 மணியளவில் நெல்லியடி பண்டித்தறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குடும்பத்தவர்கள் தேவாலயத்திற்குச் சென்று விட்டு வீடு திரும்பிய வேளை குறித்த நபர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் அப்பகுதியை சேர்ந்த நில்சன்பிள்ளை நேசராஜா (வயது-62) என தெரிவிக்கப்படுகிறது.

முதியவரின் மரணம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-6-24)

# மாலுசந்தியிலிருந்து அல்வாய் வியாபாரிமூலை வரையான வீதியை புனரமைக்க கோரிக்கை

மாலுசந்தியிலிருந்து அல்வாய் வியாபாரி மூலை செல்லும் வீதிசேதமடைந்த நிலையில் காணப்படுவதால் போக்குவரத்து செய்வதில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதி கடந்த 10 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

அத்துடன் இவ்வீதி வடமராட்சியின் பிரதான வீதி என்பதால் தினமும் பல ஆயிரக் கணக்காக மக்கள் பயணித்து வருவதுடன் பல நூற்றுக்கணக்கான வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்துத் தரும்படி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ-24)

# பேருந்து மோதியதில் பெண்ணொருவர் காயம்

பேருந்து மோதியதில் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் நான்கு மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, யாழிலிருந்து மன்னார் நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்தில் பயணித்த பெண் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இறங்கி பிரதான வீதிக்கு செல்ல முற்படுகையில் பின்னால் வந்த பேருந்து மோதியுள்ளது.

இதில் குறித்த பெண் காலிலும் தலையிலும் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் செட்டி குறிஞ்சி பூநகரியை சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயாரான மணிவண்ணன் புஸ்பவதி (வயது-36) என்ற பெண்மணியே காயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்திற்கு வருகை தந்த சாவகச்சேரி பொலிஸார் குறித்த சம்பவத்தை பார்வையிட்டதுடன் பேருந்து சாரதியை விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். (ஸ்ரீ-29)

# யாழ்.மாவட்டத்தில் விவசாயக் கண்காட்சி

வடமாகாண விவசாயத் திணைக்களம், திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், கமநல அபிவிருத்தித் திணைக்கள விவசாயிகள் கூடம், வானிலை அவதான நிலையம் ஆகியன இணைந்த வளாகத்தில் இயற்கையுடன் இணைந்த நிலைபேறான விவசாயத்தை நோக்கி எனும் தொனிப் பொருளிலான விவசாயக் கண்காட்சி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரையான 5 நாட்கள் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்தில் விவசாய இயந்திரங்கள், உபகரணங்கள் என்பவற்றின் உற்பத்தியால் ஈடுபட்டு வரும் உற்பத்தியாளர்களும் உள்ளூரில் பழங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கைத்தொழில் நிறுவனங்களும் விவசாய உற்பத்திப் பொருட்களின் பெறுமதிசேர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சமூகமட்ட அமைப்புகளும் பங்குபற்ற முடியும்.

அத்துடன் இக்கண்காட்சி தொடர்பான மேலதிக விபரங்களை க.தனபாலசிங்கம், பாடவிதான உத்தியோகத்தர் வி.இளங்குமார், விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் ஆகியோருடன் 0779114399, 0776106648 எனும் தொலைபேசி இலக் கங்களினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# பாடசாலைக்கு தண்ணீர் தாங்கி அமைப்பு

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இரண்டாயிரம் லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர் தாங்கி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவு திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஒதுக்கீடு செய்த இரண்டு இலட்சம் ரூபாயுடன் யுனிசெப் அனுசரணையுடன் இப்பணி நிறைவு செய்யப் போவதாக கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-35)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.எயிட் நிறுவனத்தினரால் யாழ். காரைநகர் ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாண வர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஆர்.சிறிதரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இருந்து வருகை தந்திருக்கும் நித்திய ஒளி அற அமைப்பின் தலைவர் அம்பலவாணர் தர்மராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவையாளரும் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜா வீரகத்தி விநாயகர் தேவஸ்தான செயலாளருமான நடராஜா, குகநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ)

யாழ்.செய்திகள்

# பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நிலையங்களில் கடமையாற்றவுள்ள மேற்பார்வையாளர், இணைப்பு நிலைய உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் இன்று புதன்கியழமை பிற்பகல் 2 மணிக்கு யா/ இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கு நியமிக்கப்பட்ட வலிகாமம் கல்வி வலயம், கோப்பாய் கல்வி கோட்டம் ஆகியவற்றை சேர்ந்த சகல மேற்பார்வையாளர்களையும் இணைப்பு நிலைய உத்தியோகத்தர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வலிகாம வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# மதுபோதையிலிருந்த இளைஞர்களின் தாக்குதலுக்குள்ளானவர் படுகாயம்


வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிபர் ஒருவரை மதுபோதையில் நின்ற 3 இளைஞர்கள் கடுமையாக தாக்கியதில் முகத்தில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள வீதியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, அவ்வீதியால் கையடக்கத் தொலைபேசி கதைத்துக் கொண்டு சென்ற வயோதிபரை அங்கு மதுபோதையில் நின்ற 3 இளைஞர்கள் காரணமின்றி வழிமறித்து தாக்கியுள்ளனர்.

இச்சம்பவத்தில் தும்பளை மணியம் தோட்டப் பகுதியை சேர்ந்த எ.துரைசிங்கம் (வயது-62) என்ற வயோதிபரே தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ஸ்ரீ-24)








பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்து நடத்தப்பட்ட இரத்ததான முகாம் அண்மையில் நடைபெற்றது. இதில் இரத்ததானம் வழங்கும் யுவதியையும் மற்றும் நெல்லியடி வல்வெட்டித்துறை பாதுகாப்பு படையினரையும் இரத்ததானம் வழங்கியோருக்கு கழகம் சார்பாக சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பருத்தித்துறை செய்தியாளர்)

# கிண்ணியாவில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவு

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா, மூதூர் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையின் பின்னணியில் இருந்து செயற்படும் சக்திகளை கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் என நீதியமைச்சர் ரவூக் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது எனவும் இதனால் வதந்திகளை நம்பி ஏமாற வேண்டாம் எனவும் ஹக்கீம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பதற்றமான நிலைமையைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக நீதியமைச்சர் ஹக்கீம் உள்ளிட்ட முஸ்லிம் அமைச்சர்கள் விமானம் மூலம் நேற்று முன்தினம் அந்த பிரதேசங்களுக்கு விஜயம் செய்தனர்.

இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள அமைச்சர் ஹக்கீம், கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை குறித்து அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருகிறது என தெரிவித்துள்ளார்.

அங்கு நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விரிவான விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளதாகவும் அவர் அதற்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளதாகவும் ஹக்கீம் கூறியுள்ளார்.

அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்ள மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதால் மக்கள் மிகவும் பொறுமையாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முப்படையினர் மற்றும் பொலிஸார் தமது கடமைகளை மேற்கொள்ளும் போது பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

சட்டத்தையும் அமைதியையும் பாதுகாப்பது மாத்திரமின்றி குற்றச் செயல்களையும் தடுப்பது பொலிஸாரின் பொறுப்பாகும். முப்படையினர் கலவரமான நிலைமையை போக்க உதவ வேண்டியதும் கடமையாகும்.

பொலிஸாரின் கடமைகளில் முப்படையினர் ஈடுபடுவது கவலைக்குரிய விடயமாகும். முப்படையினர் மக்களுக்கு மிகவும் நட்புறவுடன் செயற்படுவது மிகவும் முக்கியமானது. அதேவேளை மக்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளதால் மக்கள் பீதியடைய தேவையில்லை எனவும் நீதியமைச்சர் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை கடற்பரப்பில் புதிய நிலத்தட்டு

(கொழும்பு)

இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் புதிய நிலத்தட்டொன்று உருவாகிவருகின்றமை சர்வதேச ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

இந்திய, அவுஸ்திரேலிய நிலத்தட்டு உடைப்பெடுத்ததையடுத்து இந்த புதிய நிலத்தட்டு உருவாகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக புவியியல் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் சி.பி.திஸாநாயக்க கூறியுள்ளார்.

இலங்கையை மிகவும் அண்மித்த பகுதியில் புதிய நிலத்தட்டின் எல்லைக்கோடு அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய நிலத்தட்டு தொடர்பான விபரங்களை வரைபடங்களில் உள்ளடக்குவதற்கு புவியியல் நிபுணர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பேராசிரியர் சி.பி. திஸாநாயக்க கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் குறித்து தொழிற்சங்கங்கள் அதிருப்தி

புலனாய்வுப் பிரிவினரின் நடவடிக்கைகள் குறித்து சுதந்திர வர்த்தக வலய தொழிற்சங்கங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

தேவையற்ற வகையில் புலனாய்வுப் பிரிவினர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தலையீடு செய்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி தொழிற்சங்க உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தப்படுவதாகவும் அவர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

சர்வதேச தொழில் நிறுவனத்தின் பிரகடனங்களுக்கு புறம்பான வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு புலனாய்வுப் பிரிவினர் இடையூறு ஏற்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தனியார் ஓய்வூதியச் சட்டத்திற்கு எதிராக போராட்டங்களை நடத்திய தொழிற்சங்கப் பிரதிநிதிகளை இலக்கு வைத்து இவ்வாறு அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# முதியவர்களுக்கு 3ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டம்

## இருவருடங்களில் அமுல்

நாடளாவிய ரீதியில் சகல தேர்தல் தொகுதிகளிலும் முதியவர்களுக்கு மூவாயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் அடுத்த இரு வருடங்களில் அமுல்படுத்தப்படுமென்றும் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

உடநுவர தொகுதியில் சமூக சேவைகள் அமைச்சின் நடமாடும் சேவை நிகழ்ச்சி நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சமூக சேவை அமைச்சின் சேவைகளை வடக்கு, கிழக்கு மக்கள் பெரிதும் பாராட்டினர். இப்பகுதி மக்களுக்கு இந்த அமைச்சின் மூலம் பெரும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

முதியவர்களின் நன்மை கருதி மாதாந்தக் கொடுப்பனவு மூவாயிரம் ரூபா வழங்கும் திட்டத்தை இரு வருடங்களில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும். இதற்காக சர்வதேச நாடுகளின் உதவி பெறப்படும் என்றார். (ஸ்ரீ-2)

# 11ஆம் மாத நினைவஞ்சலியும் 55ஆவது பிறந்தநாள் நினைவும்



## அமரர் திருமதி சந்திரசேகரம் பவானிதேவி



கண் மகிழ
18.08.1956

கண்நெகிழ
17.09.2010

அன்பினால் எமை ஆண்ட அன்னையே
இன்பங்கள் கோடி உண்டேனும்
நீயின்றி எதுதான் நிலையாகிடும்
அன்பின் புன்னகையுடன்
என்றும் எம்முடனே வாழ்வீர்
எம் உயிராக...

(5914)



குடும்பத்தினர்.
கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

50ஆவது பிறந்தநாளில் புன்னகையுடன்

## இன்று ஒரு தகவல்

# அடுத்திருப்பவர்

ஓர் அடர்த்தியான காட்டுப் பாதையூடாக வியாபாரி ஒருவர் சென்று கொண்டிருந்தார்.

அவர் எருசலேம் நகரத்திலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து எரிகோ நகரத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் குறுக்கிட்ட கள்வர்கள் சிலர் திடீரென அவரிடம் இருந்த பணம், உடை எல்லாவற்றையும் கொள்ளையடித்து விட்டு அவரையும் அடித்து விட்டு சென்று விட்டார்கள்.

வியாபாரி அடியின் வேதனையால் நிலத்தில் வீழ்ந்து கிடந்தார். சிறிதுநேரத்தில் அப்பாதை வழியாக ஒரு மதகுரு வந்தார்.

வீழ்ந்து கிடப்பவரைப் பார்த்துவிட்டு அருகில் செல்லாது அவர் பாட்டுக்கு சென்று விட்டார்.

அதன்பின்னர் ஒரு பணக்கார வியாபாரி அந்தப் பாதையூடாக வந்தார். அவரும் வீழ்ந்து கிடப்பவரைப் பார்த்துவிட்டு மதகுருவைப் போல் ஒதுங்கி சென்றுவிட்டார்.

நீண்டநேரம் சென்ற பின்பு அவ்வழியாக ஒரு சமாரியன் கழுதை மீது ஏறி வந்து கொண்டிருந்தான். அவர் இஸ்ரேல் நாட்டின் அயல் நாடான "சமாரியா" என்ற நாட்டைச் சேர்ந்தவன்.

யூதர்களின் கருத்துப்படி, சமாரியர்கள் தங்களை விட தாழ்ந்தவர்கள் என்று கருதிய காலம் அது.

சமாரியன் நிலத்தில் கிடந்த மனிதனைப் பார்த்தான். உடனே கழுதையை விட்டு கீழே இறங்கி அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து மருந்தை எடுத்து காயங்களுக்கு பத்திட்டு துணியினால் கட்டினான்.

வியாபாரியின் மயக்கத்தைத் தெளிய வைத்து தனது கழுதையின் முதுகிலே உட்கார வைத்து அருகில் இருந்த ஒரு சத்திரத்துக்குக் கொண்டு சேர்த்தான். அங்கே ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அதில் அவரை இருக்க வைத்து தானும் கூடவே தங்கினான்.

மறுநாள் காலையில் எழுந்து சத்திரத்துக்குப் பொறுப்பாளரிடம் சென்று "இதோபார்... இந்தப் பணத்தை வைத்துக்கொள். இவரை நன்றாகக் கவனித்துக்கொள்... இவருக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடு. இரண்டு அல்லது மூன்று நாட்களில் நான் திரும்பி வருவேன். எவ்வளவு செலவானாலும் மிகுதிப் பணத்தைத் தருவேன்" என்று கூறி விட்டு திரும்பி புறப்பட்டுச் சென்றான்.

ஒரு சமய அறிஞரிடம் இயேசுநாதர் கூறிய கதை இது. இந்தக் கதையை அவர் கூறிவிட்டு கேட்டார். "இந்த வழியாக வந்த மூன்று பேரில் எவர் அடிபட்டவனுக்கு நண்பன் என்று அவனுக்கு இரக்கம் காட்டி உதவி செய்த சமாரியன் தான் அவருடைய நண்பன்" என்றார்.

சமாரியன் யூதர்களுக்குப் பிடிக்காதவன்... ஆனால், ஒரு யூதன் மற்றொரு யூதனுக்கு உதவி செய்யவில்லை! அடுத்த் நாட்டுக்காரன்... அந்த சமாரியன்தான் உதவினான்.

அதுமட்டுமல்ல "எவன் ஒருவன் தன்னிடமும் தன் சுற்றத்தாரிடம் காட்டுகிற அன்பைப் பிறரிடம் காட்டுகிறானோ அவன்தான் நிலையான மோட்ச வாழ்வைப் பெறுவான்" என்று இயேசுநாதர் கூறியுள்ளார்.

உடன் பிறந்த பாசத்தை விடவும் உதவி செய்கிற நேசம் மேலானது. இந்தக் காலத்திலேயேயும் உதவி செய்கிறவர்கள் இருக்கிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மண்டைதீவு, அராலிப் பகுதிகளில் பாரிய இறால் வளர்ப்பு திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 750 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பரவைக் கடற்பரப்பில் இறால் வளர்ப்புத் திட்டத்தினை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அமைச்சின் கீழுள்ள நெக்டா நிறுவனத்தினர் மேற்கொள்ளவுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இரவீந்திரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தின் தெற்குப்பகுதியான மண்டைதீவு மற்றும் அராலிப் பகுதிகளில் 750 ஏக்கர் பரவைக் கடற்பரப்பில் பாரிய இறால் வளர்ப்புத் திட்டமொன்றை நடமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

இத்திட்டத்தினை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் நெக்டா எனும் நிறுவனத்தினர் மேற்கொள்ளவுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்தினைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவருக்கு ஒரு ஏக்கர் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கடற்றொழிலாளர்களை குழுக்களாக்கி இறால் வளர்க்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளோம். மேலும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய நீர் ஆய்வுப் பணிகளையும் பண்ணை அமைப்புப் பணிகள் தொடர்பான ஆய்வினையும் குறித்த நிறுவனத்தினர் மேற் கொண்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் இறால் வளர்ப்பு திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளோர் விசேட கடன் திட்டங்களையும் பெற்றுக் கொள்வதற்குரிய ஏற்பாடுகளும் செயற்படுத்தப்படவுள்ளன. மேலும் இப்பிரதேசங்கள் இறால் வளர்ப்புத் தொழிலினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஏற்ற பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

இத்திட்டத்தின் மூலம் அனைத்து பிரதேச மீனவர்கள் மட்டும் நன்மையடையக் கூடியதாக செயற்படுத்தப்படவுள்ளது.

இதேபோன்றுகிளிநொச்சி மாவட்ட மீனவர்களின் நன்மை கருதி சுண்டிக்குளத்தினை அண்டிய பரவைக் கடற்பகுதியில் 25 இலட்சம் இறால் குஞ்சுகளை வளரவிட்டு அப்பகுதி மீனவர்களையே மூன்று மாதங்களின் பின்பு அறுவடை செய்யும் திட்டத்தினையும் ஆரம்பித்துள்ளோம். இந்த இறால் குஞ்சுகள் வளரும் காலம் வரையும் குறித்த பகுதிகளில் தொழில் செய்வதைத் தடை செய்து பிரதேச மீனவர்களுக்கு இலகுகடன் வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். மேலும் இறால் அறுவடையின் பின்பு கடன்களை மீளப் பெறவும் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/தாவடி இ.த.க. பாடசாலைக்கு (வகை-II பாடசாலை) அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-I , 2-II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் I,2-I ,2-II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 26.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 90 | 70 |
| தக்காளி | 30 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 40 |
| கோவா | 30 | 40 |
| கரட் | 50 | 60 |
| பூசணி | 20 | 25 |
| புடோல் | 30 | 30 |
| வாழைக்காய் | 30 | 25 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 |
| பாகற்காய் | 70 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | -- |
| பயற்றங்காய் | 50 | 90 |
| லீக்ஸ் | 50 | 60 |
| பீற்றூட் | 20 | 30 |
| கறிமிளகாய் | 35 | 40 |
| முருங்கைக்காய் | 90 | -- |
| போஞ்சி | 120 | -- |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 |
| கீரை - 1 பிடி | 6-8 | 20 |
| தேசிக்காய் | 70 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

# இராசி பலன்

*17.08.2011*
*(ஆடி 32, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*சதுர்த்தி முழுவதும்*
*உத்தரட்டாதி பின்னிரவு 3.18 மணிவரை*
*இராகுகாலம் 12.05-1.35 மணிவரை*
*சுபநேரம் 4.35-6.05 மணிவரை*
*சங்கடஹர கணபதி விரதம்*

**மேடம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடிய நேரம் பணிபுரிய நேரிடலாம், மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், சுபசெலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வருமானம் திருப்தி தரும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**மிதுனம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையலாம், தொல்லை தந்தவர்கள் மனம்மாறி தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவர், அரசு வழி அனுகூலமுண்டு.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், தேவையற்ற பகைகளால் மனச்சஞ்சலத்திற்கு உட்படலாம், செலவுகளுக்கு பணப்பற்றாக்குறை ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** புதிய தொழில் தொடங்க திட்டம் தீட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம்.

**துலாம்** நன்மைகள் நடைபெறும் நாள், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகும், நல்ல செய்திகள் உங்களை நாடி வரும் நாள்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தொலைபேசி அழைப்புக்கள் நல்ல செய்திகளைத் தரும், பிள்ளைகளால் பெருமையடைய வேண்டிய நாள்.

**தனுசு** தாராளமாக செலவு செய்து மகிழும் நாள், நாணயமும் நேர்மையும் கொண்ட நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்** இளைய சகோதரத்தின் வழியில் இனிய தகவல் வந்து சேரும், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், பிறரால் பெருமை சேரும்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொருளாதார நிலை உயரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள்.

**மீனம்** புத்திசாதுரியத்தால் வளம் காணும் நாள், விருந்து விழாக் களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

வளவன்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள்


ஆசிரியர் :- கூ. திலீப்குமார், விவேகானந்தா கல்லூரி, கொழும்பு

## பகுதி - I


எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♣ கீழ்க் காணப்படும் படங்களுள் மூன்று படங்கள் ஏதோ ஒரு வகையில் பொருந்தியுள்ளன. ஒரு படம் பொருத்தமற்றதாக உள்ளது. அப் பொருத்தமற்ற உருவின் கீழ்க் கீறிடுக.


01)





02)




♣ 3ஆம், 4ஆம், 5ஆம் ஆகிய சதுரங்களிலுள்ள உருவங்களுக்கு பொருத்தமான உருவங்களை அருகிலுள்ள பெட்டியிலிருந்து இனங்கண்டு பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை எழுதுக.

03)  ..................

04)  ..................

05)  ..................




♣ பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

வீரர் ✱ எம் நாடு
வெற்றிகள் கண்டதும் எம் நாடு
தீரர்கள் வாழ்ந்ததும் எம் நாடு
தியாகம் ▮ எம் நாடு


06) ✱ குறியீட்டிற்குப் பதிலாக வரவேண்டிய சொல் யாது?
1. வாழ்ந்து 2. இருந்தது 3. மடிந்தது

07) ▮ குறியீட்டிற்குப் பதிலாக வரவேண்டிய சொல் யாது?
1. நிறைந்தது 2. கண்டது 3. புரிந்தது

08) கட்டத்திலுள்ள செய்கைக்கு சமனான செய்கைகளைக் கொண்ட கட்டத்தை விடையிலிருந்து தெரிவுசெய்க.

| 120 - 12 | + 66 = 174

1. | 71 + 27 |  2. | 173 - 58 |  3. | 43 + 65 |

08) 

இவ்வுருவில் உள்ள சதுரங்கள் எத்தனை?
1. 20 2. 26 3. 30

♣ பின்வரும் பாடலை வாசித்து 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

வண்ணக்குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத் தாயும் நீயாவாய்
விட்டுக்கொடுத்து வாழும்
வித்தை எங்கு கற்றீரோ
கற்கும் சிறுவர் மனதிலே
கருத்தை விதைத்து உயர்த்துகிறாய்.

10) இப்பாடல் எப்பிராணியை பற்றிக் கூறுகின்றது?
1. குயில் 2. காகம் 3. கிளி

11) இப்பிராணியிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் நற்பண்பு யாது?
1. வித்தை கற்றல்
2. விட்டுக்கொடுத்தல்
3. கருத்தை விதைத்தல்

12) கமலின் வலது கன்னத்தில் மச்சமொன்று உள்ளது. இடது பக்கமாக தலை வாரியுள்ளான். இத் தரவுகளுக்கு பொருத்தமான கமலின் உருவைத் தெரிக.


1. 2. 3.




13) தனபால் தான் சொல்வதுதான் சரி என வாதாடுபவன். அவன் ஒரு பிடிவாதக்காரன், தனபால் தொடர்பாக நாம் கூறக்கூடிய பழமொழி யாது?
1. அடாது செய்பவர் படாது படுவர்.
2. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்
3. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.

14) தேவியும், வாணியும் ஒரேயளவு உயரமுடையவர்கள். தேவியை விட மாலா உயரமானவள். வாணியிலும் ஆரணி கட்டையானவள். இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?
1. மாலா 2. வாணி 3. ஆரணி

♣ 15ஆம், 16ஆம் வினாக்களில் காணப்படும் உருக்களில் உள்ள இடைவெளி களுக்கு பொருத்தமான உருக்களைத் தெரிவுசெய்க.

15) 

1. 2. 3.

16) 

1. 2. 3.

17) எதிர்வரும் 2012ஆம் ஆண்டில் எத்தனை நாட்கள் இருக்கும்?
1. 365 நாட்கள் 2. 365 ¼ நாட்கள் 3. 366 நாட்கள்

18. 2011ஆம் ஆண்டு ஜுன் மாதம் 1ஆம் திகதி புதன்கிழமை எனின், 2011ஆண்டு ஜுலை மாதம் 1ஆம் திகதி என்ன கிழமை?
1. வெள்ளி 2. சனி 3. வியாழன்

♣ 19ஆம், 20ஆம் வினாக்களில் வரும் சமபவங்கள் நடைபெற ஏதுவாக இருக்கும் பொருத்தமான காரணத்தை விடையிலிருந்து தெரிவுசெய்க.

19) தொழிற்சாலையொன்றில் சைரன் ஒலி ஒலிப்பது,
1. தொழிலாளர்கள் உணருவதற்கு.
2. தொழிலாளர்கள் வீடு செல்வதற்கு.
3. தொழிற்சாலையில் விபத்து ஏற்பட்டிருத்தல்.

20) வீடுகளில் புளோரொளிர்வு பயன்படுத்துவது,
1. ஒளி அதிகம் என்பதனால்.
2. கண்களுக்கு பாதிப்பு இல்லை என்பதால்.
3. மின்சாரத்தை மிச்சப்படுத்துவதற்காக.

♣ கீழுள்ள அட்டவணையை அவதானித்து 21ஆம், 22ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

பாடசாலை ஒன்றில் உள்ள மாணவர் விரும்பும் விளையாட்டுகள்.

| விளையாட்டுக்கள் | கிரிக்கெட் | பூப்பந்து | வலைப்பந்து | கரப்பந்து |
|---|---|---|---|---|
| பிள்ளைகளின் எண்ணிக்கை | 132 | 185 | 139 | 92 |

21) பிள்ளைகளிடையே பிரசித்தி பெற்ற விளையாட்டு எது?
1. வலைப்பந்து 2. கிரிக்கெட் 3. பூப்பந்து

22) பாடசாலையில் உள்ள மாணவர்களில் ¼ பங்கினர் பெண்கள் எனின், ஆண்கள் தொகை எத்தனை?
1. 411 2. 518 3. 137

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லைக் கந்தன் மஹோற்சவ பெருவிழாவையொட்டி சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினரால் நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை தெய்வீகப் பேருரை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத் தலைவர் மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்வில் தெய்வீகப் பேருரையினை சைவப் புலவர். கருத. சத்தியதாசனும் நாளை நடைபெறும் தெய்வீகப் பேருரை நிகழ்வில் **தமிழர் கலாசாரம்** எனும் தலைப்பில் மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தனும் சொற்பொழிவினை நிகழ்த்தவுள்ளனர்.

★ ★ ★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் **கம்பராமாயணம்** பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா **பரசுராமன்** பற்றி இசைப்பேருரை நிகழ்த்துவார்.

★ ★ ★ ★ ★

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் தினமும் மாலை 3 மணிமுதல் 6 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் 14ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் **சைவ விஞ்ஞானம்** என்ற தொனிப் பொருளில் என்.ரி.ஸ்ரீந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து காரைநகர் சிவகாமி அம்பாள் அறநெறிப்பாடசாலை, நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாள் அறநெறிப்பாடசாலை, ஆனைக்கோட்டை அந்திக்குளி ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

★ ★ ★ ★ ★

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 14 ஆவது நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் திருமதி சிவரஞ்சினி ரமணா வழங்கும் பாட்டுக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

இதில் வயலின் கே.குகபரன், மிருதங்கம் வி.ரமணா, முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர்.

★ ★ ★ ★ ★

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சமயச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் தினந்தோறும் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் கலா மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்றைய தினம் நா. தர்மராஜா (அகளங்கன்) வழங்கும் ஒரு திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

## மர்ம மனிதர்கள் விவகாரம்

# பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை

சேத்துக்குடா பொலிஸ் காவலரணிலுள்ள அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்யுமாறும் அக்காவலரணிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் புகைப்படங்களை காவலரணிற்கு முன்பாக காட்சிக்கு வைக்குமாறும் பொதுமக்கள் விடுத்த கோரிக்கைக்கு பொலிஸார் உத்தரவாதமளித்துள்ளனர்.

மட்டக்களப்பு புதுநகரில் நேற்று முன்தினம் இரவு நடமாடியதாகத் தெரிவிக்கப்படும் மர்ம மனிதர்களை பொதுமக்கள் துரத்திச் சென்ற போது அம்மர்ம மனிதர்கள் சேத்துக்குடா பொலிஸ் காவலரணுக்குள் ஓடி ஒளிந்து கொண்டதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் புதூர் விமான நிலையத்துக்கு அருகாமையில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா. அரியநேத்திரன், சீ. யோகேஸ்வரன் ஆகியோர் பொலிஸாரிடம் விடுத்த கோரிக்கைக்கமைய ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்ட தலைமையிலான பொலிஸார் சமுகமளித்தனர்.

சேத்துக்குடா பகுதியில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் காணப்படுவதாகவும் அம்மர்ம மனிதர்கள் சேத்துக்குடா காவலரணுக்குள் ஓடி ஒளிந்து கொள்வதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ள பொதுமக்கள் இவ்வாறு எமது பகுதிக்குள் புதிதாக நடமாடுபவர்களை அடையாளம் காணும் நோக்கில் சேத்துக்குடா பொலிஸ் காவலரணுக்கு முன்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களின் புகைப்படங்களை காட்சிக்கு வைக்குமாறும் சேத்துக்குடா பொலிஸ் காவலரணிலுள்ள அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்யுமாறும் கோரினர்.

பொதுமக்களின் கோரிக்கைக்கு உத்தரவாதமளித்த மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்ட சேத்துக்குடா காவலரணில் தமிழ்மொழி மூலமான பொறுப்பதிகாரியுடன் புதிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்களெனவும் கூறினார்.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்ட இதற்கு இணக்கம் தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ஸ்ரீ-2)

# இலங்கையில் அருகிவரும் தாவரங்கள்


இலங்கையிலுள்ள தாவரங்களில் 5 வீதமானவை அருகி வருவதாக தேசிய உயிரியல் பல்வகைமை செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதில் இலங்கைக்கே உரித்தான சில தாவரங்களும் அடங்குவதாக அதன் பணிப்பாளர் காமினி கமகே கூறியுள்ளார்.

அருகிவரும் தாவரங்களை பாதுகாப்பதற்கான துரித திட்டமொன்றை செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் தேசிய உயிரியல் பல்வகைமை செயலகம் வலியுறுத்தியுள்ளது.

இதற்கமைய பொது மக்களின் ஒத்துழைப்புடன் தாவரங்களை பாதுகாப்பதற்கான விசேட திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 14 ஆம் திருவிழா



## கரை சேர்க்க வந்திடையா

கந்தனின் திருநாமம் கணமேனும் மறவாதோர்
எண்ணில்லாத் துயர் சுமந்து ஊன் உறக்கமின்றி
கூடாரம் கீழிருந்து குற்றேவல் புரிகின்ற
கொடுமைதனை அறிவீரோ? கறை படிந்த அவர் வாழ்வை
கரைசேர்க்க வந்திடையா.

வி.பாரதி, அச்சுவேலி வடக்கு.

## உன்னடி பணிந்தோமையா

அகில உலகை சுற்றி வந்த ஆறுமுகனே
அப்பனுக்கு பாடம் சொன்ன சுப்பிரமணியனே
ஆனந்தமாய் நல்லூரிலே குடியிருப்பவனே
சிற்பமாய் வீற்றிருக்கும் சிங்கார வேலனே
சிறப்பான உன் வீடு தங்கக் கோயில் ஐயா
பக்தனாய் உன்னடி பணிகின்றோம்
பக்தியாய் பேரருள் புரிந்து.....
எம்மைக் காத்திடு சக்தியின் மைந்தனே.....

பா.மதனரூபி,
அல்வாய் வடக்கு.

## நல்லவரம் தந்துவிடு

நல்லூரிலே வீற்றிருக்கும் நாயகனே
நல்லருளை தந்து விடு வேலவனே!
துன்பங்களை போக்கி விடு பாலகனே
நல்ல வரம் தந்து விடு ஆறுமுகனே!

அ.அன்பரசன்,
(யா/ சைவப்பிரகாச வித்தி)

## நல்லை நகர் நாதா நல்லிணக்கம் காட்டி விடு

வல்வினைகள் போக்கி விடு வட பழனி வேலவனே!
எல்லோரும் வாழச் செய் ஏறுமயில் வாகனனே!!
நல்லோர்கள் வாழ விடு நயமான சண்முகனே,
வல்லவர்கள் ஆக்கிவிடு வடபழனி ஆண்டவனே,
நல்லிணக்கம் காட்டி விடு நல்லை நகர் நாயகனே?

மட்டுவில், க.சி.சதாசிவம்.

நல்லைப் பதிவாழ் வேலவா! நற்கருணை புரிவாய் நல்லூரா!



கணேசன் ஸ்ரோர்ஸ்

இல.201, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4064)

# மற்றொரு கோணம்

## ஆன்மீகம் 13



சாமியார்கள் அனைவரும் அமெரிக்கா, ஐரோப்பா என்று அடிக்கடி வெளிநாடுகளுக்கு பறந்து போகிறார்களே... எதற்காக? உங்கள் கொள்கைகளைப் பரப்பவா? அந்த நாட்டுத் தத்துவங்களை எதிர்க்கவா? சிஷ்ய கோடிகளை உருவாக்கி நன் கொடைகளை அறுவடை செய்யவா? எதற்காக..?

ஈஷாவின் பணிகளில் 70 வீதம் கிராமங்களில்தான் நடை பெறுகின்றது. கிராமங்களில் இலவச மருத்துவமனைகளை இயக்குகிறீர்களே, ஆயிரக்கணக்கான கிராமங்களில் இலவச மருந்துகள் கொடுக்கிறீர்களே, இலவசக்கல்வி கொடுக்கிறீர்களே, ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு உணவு கொடுக்கிறீர்களே... இவையெல்லாம் எப்படிச்சாத்தியமாகிறது என்று உங்களுக்குக் கேட்கத்தோன்றவில்லை. வெளிநாடு போவதுதான் உங்கள் கண்களை உறுத்துகிறது.

வெளிநாடு செல்வது ஏதோ பெருமைக்குரிய விடயம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். நான் அப்படி நினைக்கவில்லை. ஈஷா அருகில் இருக்கும் பின் தங்கிய கிராமங்களுக்கு போகிற போது எப்படி உணர்கிறேனோ, அப்படித்தான் அயல்நாடுகள் செல்கின்ற போதும் உணர்கிறேன். அங்கு செல்கிறபோது விரைவில் திரும்ப வேண்டும் என்று விரும்புகிறேனே தவிர அங்கேயே இருக்க நினைப்பதில்லை.

வெளிநாடு என்பது ஏதோ சொர்க்கம் என்று நீங்கள் நினைத்தால்தான் இத்தகைய கேள்விகள் எழுகின்றன, இந்த மனநிலை மாறவேண்டும். நல்லது செய்கிற புத்தியும் நல்லது செய்வதற்கான சக்தியும் இருந்தால் வாருங்கள் என்ன பணிகள் செய்யலாம் என்று சொல்லித் தருகிறேன். வீண் விவாதங்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கும் பயன் தரும் பணிகளில் ஈடுபடுங்கள்.

மக்கள் மத்தியில் நிறையப் போலிச் சாமியார்கள் பரவிவிட்டதாகச் சொல்கிறீர்கள். நல்ல சாமியார், போலிச்சாமியார் என்று எப்படி அடையாளம் காண்பது? நல்ல சாமியாரின் இலக்கணம் என்ன? போலிச்சாமியார்கள் சிலரின் பெயரை ஆவது தாங்கள் சுட்டிக் காட்டுவீர்களா?

யார் நிஜமான சாமியார், போலிச் சாமியார் என்றெல்லாம் நீங்கள் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. சாமியார்களுக்கும் குருமார்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். சாமியார்கள் வெறுமனே ஆசி வழங்குவார்கள். குருமார்கள், உங்கள் உயிர்த்தன்மையை உணர்த்துவதற்கான கருவியைத் தருவார்கள்.

இந்தக்கருவி உங்களுக்கு பயன்படுமேயானால், அவர்கள் உண்மையானவர்கள் என்று அர்த்தம். அதேபோல அவர்களைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்தாலே அவர்களுடைய நோக்கம் உங்கள் நலனைப் பற்றியதா அல்லது தங்களின் சொந்த நலனைப் பற்றியதா என்கிற உண்மை புரிந்துவிடும். கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்தாலே அவர்களை உங்களால் எடை போட்டுவிட முடியும்.

தொலைந்தவை, இருப்பவை என அத்தனை ஞானிகளும், மதங்களும், தத்துவங்களும் அறிவுரைகளை அள்ளித் தெளித்தன. ஜெபங்களிலும், பிரார்த்தனைகளிலும் சடங்குகளிலும் மனிதனைத் திணித்தன. ஆனாலும் மனிதன் நலமாக இல்லை. குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி... குருட்டுக் குழியில் விழுந்து கொண்டிருக்கிறார்கள். சரியா?



மற்றவர்களின் உபதேசம் காரணமாக மட்டும் மனிதர்கள் குருட்டாம் போக்கில் வாழ்வதில்லை. பேராசை மனிதனின் கண்ணை மறைக்கிறது. காமம் மனிதனின் கண்ணை மறைக்கிறது. பணம் மனிதனின் கண்ணை மறைக்கிறது. சமயங்களாலும், தத்துவங்களாலும் மட்டும் மனிதன் குருடாகவில்லை.

எல்லா உபதேசங்களாலும் மனிதர்கள் குருடாகிவிட்டதாக சொல்ல முடியாது. மனிதன் கண்மூடித்தனமான வழக்கங்களில் இருந்து விடுபட வேண்டும் என்கிற விருப்பத்தில் பல உபதேசங்கள் நிகழ்ந்தன. பல தத்துவங்கள் மலர்ந்தன. அவற்றையும் சிலர் சரியாகப் பயன்படுத்தினார்கள், சிலர் தவறாகப் பயன்படுத்தினார்கள்.

சில உபதேசங்கள் காரணமாகத்தான் குருட்டாம் போக்கில் வாழ்ந்த மனிதன் கண் திறந்து பார்த்தான். ஒவ்வொரு தலைமுறையையும் தூய்மைப்படுத்த வேண்டியிருக்கிறது. அந்த செயல் காலம் காலமாகவும் நிகழ்கிறது. இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது.

எனவே குருட்டாம் போக்கில் வாழ்கிற மனிதனை கண்திறந்து பார்க்கச் செய்கிற ஞானிகளையும் உபதேசங்களையும் மனிதன் அடையாளம் காணவேண்டும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# தமிழ்... மொழி... சில பிற... பல

## தமிழ்... மொழி, மற்றும் சிறுபல விடயங்கள், பல சிறு விவகாரங்கள் சம்பந்தமான குறு ஆய்வு

01

முதல் வரி (First Line/Statement)

உலகின் மிகத்தொன்மையான, முக்கியமான மொழிகளில் தமிழும் ஒன்று.

கபாட புகுவழி (Doorway Entrance)

மொழி பற்றி பொய்பேசக் கூடாது; பேசமுடியாது. அது பாஷையின் மேலேற்றத்துக்கு சத்துருவாகிவிடும்.சீரார்ந்த ரீதியில் இல்லாத வகைக்கு, பற்பல கிளைக் காரணங்கள் சார்ந்து, ஒரு குறித்த இனக்கூட்டத்தாரின் புளகாங்கிதத்துக்காகவும் சுய விரிப்பேற்றுகைக்காகவும் சரித்திரத்தையும் ஜதார்த்தத்தினையும் திரித்து, அகமெய் அலகுகளையும் ஆவணங்களையும் தீய்த்து, சுய கிரீட சூட்டு வைபவத்துக்காய், வாய்மைக்கு வெளியிலான வாதங்களை வைப்பது மொழியின் முன் வளர்ச்சிக்கான படிக்கல் அல்லா விடினும் அல்ல. இதன் பொருட்டு, ஆதிகால ஆரம்பப் பாஷைகளின் ஜனனத்தை ஆய்வது அவசியம். அத்துடன் இதனுடன் தமிழ் பாஷையின் நிலையெடுப்பையும் ஒப்பீட்டாய்வது அத்தியாவசியம். இஃது இவ்வகையான பாதையில், எப்படியான மொழிகளிலிருந்து தமிழ் தழைத்தது, தகைத்தது என்பதையும் உலக விரிப்பில் அதன் ஸ்திரசோபம் எப்படியானது என்பதையும் கிரகிக்க தரவு தரும்.

அதிநவீனத்துவம் சிதறிப் பொலிந்திருக்கின்ற இந்நாள் வதியின் மெய்யான ஆதி நாகரீக ஆரம்பம் இன்றைக்கு ஏறத்தாழ ஆறாயிரம் வருடங்களுக்கு முன்னர்தான் எற்பட்டது. இன்று ஷேமமாக வளர்ந்து பூரணம் பெற்றிருக்கின்ற ஏராளமான மொழிகளில் ஆதியடியைத் தேடிக்கொண்டு வரலாற்றில் பின்புறமாக நகர்ந்து போனால் அது எம்மை மத்திய கிழக்கின் ரைகிறிஸ்-இயூஃபிறேற்ஸ் (Tigris Euphrates) நதியிடையான சுமேரியன் (Sumerian) பிரதேசத்திற்குத்தான் கொண்டு போய்விடும்.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

கிறிஸ்துவுக்கு மூவாயிரம் வருடம் முன்பாகவே சமிக்ஞைகளும் சமச்சீரற்ற ஒலியெழுப்புகைகளுமாயிருந்த ஒரு தொகுப்பற்ற துருக்கலான பேச்சு ஊடக வடிவத்துக்கு (இதுவே மொழியின் மூலம்) சமாந்தரமாக, செம்மையற்ற ஆனால், எதாவ்தொரு வகையிலாவது நிலை வெளிப்படுகையைக் கொண்டு வரக்கூடிய சித்திர வடிவங்களை (இதுவே எழுதத்தின் மூலம்) சுமேரியர் முழுமுதற் சுழி போட்டுக் கொண்ட கையுடன், இன்று பல் விரிபுபட்ட பாங்கில் கோடி கோலம் காட்டும் மொழிகளதும் அவற்றின் வீரயங்களதும் தொடர்பு ஊடகப் பரிவர்த்தனையினதும் பிறப்பு தொடங்கிவிட்டிருந்தது.

பேசுகிற மொழிக்கு, பார்வைக்கான இலச்சினைகளை ஏற்படுத்தி சொல்லப்படுகிற வார்த்தைகட்கு தனிப்பட்ட உருப்படங்களை (Pictogram to London) களிமண் தகடுகளில் கீறி சுமேரியர் பேச்சும் எழுத்தும் கிளர்வதற்கான ஆதி நூலை கோர்த்தனர். பிறகு, இதே களிமண் தகடுகளில் கொருக்கைகளால் படவடிவங்களை (Cuneiform) வரைந்து எழுத்துப் பதிப்புக்கும் ஆரம்பப் பிறப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

ஏறத்தாழ இதே காலப்பகுதியில் எகிப்திய நாகரிகம் பிறப்பெடுத்து தவழ்ந்த போது, அவர்களும் பேச்சு ஊடலினை பதிப்பில் போடவேண்டுமென்கிற தேடலில் குகைகளினுள்ளிருந்த பாறைகளில் எழுத்துக்களுக்கு அடி மூலமாக இருந்த சித்திர வடிவ உருவங்களை (Pictographic Writting) வரைய ஆரம்பித்தனர். கிரேக்க மொழியில் "புனித செதுக்கல்" (Sacred Carvings) என்று அர்த்தம் கொள்ளும் செதுக்கிய எழுத்து இலச்சினை அவர்களது பெருவிருத்தி பெறாத அதியாதிப் பேச்சு ஊடகத்திற்கு பார்வை பதிவாகியது. சுமேரியரை வெற்றி கொண்ட அக்காடியர்கள் (Akkadian) மொழியளவில் இவர்கள் சுமேரியர்களது பேச்சு வடிவத்தை தழுவாத தனித்துவமான பரிவர்த்தனை அமைவை கொண்டிருந்தனர்- எழுத்து இலச்சினை சார்பில் தமது உருபுகளை, சுமேரியர்களது பதிவுகளுடன் குழைத்து, இன்னும் சீரான வரிவடிவம் ஒன்றை புனைந்தனர். பபிலோனியா= மொசப்பத்தேமியா (Babylonia= mesopotamia) வில் உலக மானுட நாகரிக வரலாற்றின் தொடக்குனர்களாக செழிப்புப் பெற்றிருந்த அக்காடியார்களிலிருந்து தான், பேச்சு ஊடகத்தின் ஓரளவு பூரணமான சகல அம்சங்களும் தொடங்கின.

சிறீனோ சிறீ-சிறீசு

(தொடரும்)

# கிரக அமைப்பும் நோய்களும்



தற்காலத்தில் சிறுநீரகக்கோளாறு என்பது அனைவரிடமும் எட்டிப்பார்க்கும் நோயாக உள்ளது.

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய், இராகு, மாந்தி இணைந்து 6 அல்லது 8 போன்ற இடங்களில் அமையப்பெற்றால் அந்த ஜாதகருக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

செவ்வாய், சுக்கிரன் இணைந்து 7 இல் அமையப்பெற்றால் சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படுகிறது.

7,8க்கு அதிபதிகள் பரிவர்த்தனை பெற்று காணப்பட்டால் கொடிய நோய்கள் எட்டிப்பார்க்கும்.

அந்த அதிபதிகள் பாவிகளாக அமையப்பெற்றால் சிறுநீரக பாதிப்பு உண்டாகிறது.

ஒருவர் ஜாதகத்தில் சூரியன், செவ்வாய், இராகு, சனி போன்ற பாவிகள் மேற்கண்ட இடங்களில் இணைந்து காணப்பட்டால் தீவிர சிறுநீரக பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

இரண்டுக்கும் மேற்பட்ட பாவிகள் 5,6,7 ஆகிய இடங்களில் ஒன்றில் இணைந்து காணப்பட்டால் வயிறு கோளாறு, சிறுநீரக கோளாறு போன்ற கொடிய நோய்கள் ஏற்படுகின்றன.

ஜென்ம லக்கினம் என்பது ஒருவரது உடல் அமைப்பை உறுதி செய்கின்றன.

சூரியன், சனி, இராகு ஆகிய கிரகங்கள் 5 ஆம் வீட்டில் அமையப்பெற்றால் வயிறு மற்றும் சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படுகிறது.

சூரியன், செவ்வாய் சேர்க்கை ஜென்ம லக்கினத்தில் காணப்பட்டால் சிறுநீரக கோளாறு உண்டாகும்.

ஒருவர் ஜாதகத்தில் சுக்கிர பகவான் பலம் இழந்து காணப்பட்டு பாவிகள்

## ஜோதிடக் களம்

ஜென்ம லக்கினத்தில் 3 பாவிகள் அமையப் பெற்று லக்கினத்தை பாவகிரகங்கள் பார்வை செய்தால் சிறுநீரக பாதிப்பு ஏற்படுகிறது.

சேர்க்கை பெற்று காணப்பட்டால் சுக்கிரன் தசாபுத்தி காலங்களில் நீரிழிவு நோய் ஏற்படுகிறது.

6 ஆம் வீட்டை பாவிகள் பார்வை செய்தாலும் 6, 8 இல் பாவிகள் அமையப்பெற்றாலும் 6 ஆம் அதிபதி பாவிகளுடன் இணைந்து சுபர்- பார்வையின்றி இருந்தாலும் நீரிழிவு நோய் உண்டாகிறது.

காலபுருஷ தத்துவப்படி கன்னி 6ஆம் வீடாகும். இதில் பாவிகள் அமைந்தாலும் பார்த்தாலும் ஜீரண சக்தி பாதித்து நீரிழிவு நோய் உண்டாகிறது. ஜல இராசிகளில் பாவிகள் அமையப்பெற்று சுபகிரக பார்வை இன்றி இருந்தால் நீரிழிவு நோய் உண்டாகிறது என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

### பரிகாரம்

சிறுநீரக கோளாறு உள்ளவர்கள் மகாலட்சுமியை வெள்ளிக்கிழமைகளில் நெய் விளக்கேற்றி வணங்கி வருதல், முருகப்பெருமானை செவ்வாய்க்கிழமை வணங்கி வருதல், வைத்தீஸ்வரன் கோவிலுக்கு சென்று முருகப்பெருமானை வழிபடுதல் போன்ற பரிகாரங்களை மேற்கொண்டால் சிறுநீரக கோளாறு நீங்கும் என்பது நம்பிக்கை.

# திருமணத்தடை நீக்கும் பரிகாரம்

ஒருவர் ஜாதகத்தில் சூரியனுடன் சுக்ரன் சேர்ந்து இருந்தாலோ ஏழுக்குரியவர் சூரியனுடன் சம்பந்தப்பட்டிருந்தாலோ தோஷத்தை உண்டாக்கும் கிரகம் சூரியனின் சஞ்சாரம் பெற்றிருந்தாலோ அவருக்குத் திருமணத்தடை உண்டாகும்.

இந்த திருமணத்தடை நீங்க சூரிய பகவானுக்கு பரிகாரம் செய்து வழிபட வேண்டும். மேலும் ஒருவரின் திருமண வயதில் சூரிய திசை, சூரிய புத்தி நடைபெற்றாலும் சூரிய பகவானுக்கு பரிகாரம் செய்து வழிபடுவது சிறந்தது.

**ஓம் ஸ்ரீ பாஸ்கராய வித்மஹே**
**மகத்யுதிகராய தீமஹி**
**தந்தோ ஆதித்ய ப்ரசோதயாத்**

என்கிற சூரிய பகவானுக்கு உரிய காயத்திரி மந்திரத்தை சூரிய தோஷத்தால் திருமணத்தடை ஏற்பட்டு அவதிப்படுபவர்கள் ஜெபித்து வர வேண்டும். வீட்டு அருகே உள்ள சிவபெருமான் கோவிலுக்கு தினமும் மூன்று முறை சென்று வழிபடலாம். சூரிய கிரகணம் நடைபெறும் நாட்களில் கிரகணம் நடைபெறும் நேரத்தில் 3 செந்தாமரைப் பூ அல்லது 3 எருக்கன் இலை அல்லது 3 சூரிய காந்தி பூக்களை எடுத்துக் கொண்டு அவற்றுடன் ஒரு சிறிய தாமிரம் துண்டு, கோதுமை 100 கிராம், ஒரு தேங்காய் ஆகியவற்றை கிழக்கு நோக்கி ஓடும் ஆற்றில் அல்லது ஓடையில் நின்று கொண்டு ஒவ்வொன்றாய் விட வேண்டும். இவ்வாறு செய்வதால் திருமணத்தடை நீங்கி விரைவில் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை.

சூரியனால் பிதுர்க்காரகன் தோஷம் ஏற்பட்டவர்கள் தம் தாய், தந்தைக்கு வேண்டிய உதவிகளை செய்வது, அவர்கள் மனம் புண்படாமல் நடந்து கொள்வது போன்றவற்றை தீவிரமாக கடைப்பிடித்தால் தோஷத்தினால் ஏற்படும் துன்பங்கள் நீங்கும்.

தந்தை, தாயை, இழந்தவர்கள் பிதுர்க்கடன் நியமங்களை செய்வது அவர்களின் ஆசீர்வாதம் பெறவும் தோஷம் தீரவும் வழி செய்யும் எளிய பரிகாரமாகும்.

# அரசியல் தீர்வாக 13 ஆவது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது. இதற்கான காரணத்தை கூட்டமைப்பினருக்கும் இந்தியாவிற்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விளக்குவார் என்று தேசபற்று தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாதத்திற்கு இனி இலங்கையில் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. அரசியல் தீர்வு என்ற போர்வையில் நாட்டிற்குள் சுயாட்சியை முன்னெடுக்க பயங்கரவாதத்தின் நிழல் மனிதர்கள் முயற்சிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக குணதாச அமரசேகர தொடர்ந்தும் கூறுகையில்,

13 ஆவது திருத்தச் சட்டம் அதிகாரப் பகிர்வு ஒரு போதும் தேசிய அரசியலில் இடம்பிடிக்காது. இனப்பிரச்சினைக்கு தீர்வாக யாராவது 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த பரிந்துரை செய்வார்களாயின் அவர்கள் நாட்டை துண்டாட பின்னணியில் இருந்த செயற்படுபவர்களாவர்.

இந்தியாவும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் ஒவ்வாத விடயத்தை வலியுறுத்தி வருகின்றனர். இதை முற்றாக தெளிவுபடுத்த வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

இதற்காக விசேட செயலமர்வு ஒன்றை நாளை வியாழக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் விசேட சொற்பொழிவாளராக பாதுகாப்பு செயலாளர் உரையாற்றவுள்ளார். அத்துடன் புத்திஜீவிகள், இராஜதந்திரிகள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள் என்றார். (ஸ்ரீ-2)

# காஸ் விலையை அதிகரிக்க அனுமதிக்க கோரிக்கை

(கொழும்பு)

சமையல் காஸ் விலையை அதிகரிப்பதற்கு அனுமதியளிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் லாவ் காஸ் நிறுவனம் கோரியுள்ளது.

ஒரு சிலிண்டர் காஸ் விலையை 570 ரூபாவினால் அதிகரிப்பதற்கு அனுமதியளிக்குமாறு லாவ் காஸ் கோரியுள்ளதாக மேற்படி அதிகார சபையின் அதிகாரியொருவர் கூறினார்.

இக்கோரிக்கை தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபை இன்னும் தீர்மானம் எதையும் மேற்கொள்ளவில்லை. (எ-5)

# தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது

## மாகாணசபைகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவிப்பு

கட்சித் தலைமையில் மாற்றம் ஏற்படுத்துவதனால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என மாகாண சபைகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட்டு தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர்கள், கிளர்ச்சிக்குழு உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தவோர் கட்சிக்குள் தீவிரவாதத்தை விதைப்பவர்களாகவே கருத வேண்டுமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கரு ஜயசூரிய பிரபல்யமான தலைவர் என்ற கருத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கடந்த பொதுத் தேர்தலில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் கரு ஜயசூரிய இரண்டாம் இடத்தையே வகித்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் வெற்றியீட்ட முடிந்தால் அது அரசாங்கத்திற்கு பலத்த அடியாக அமையும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்கத்திலிருந்து விலகி மீள ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட போது கரு ஜயசூரியவிற்கு பதவி வழங்கக் கூடாது என போராடியவர்களே இன்று கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பற்றுச்சீட்டு வழங்குவது கட்டாயம்

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாடிக்கையாளர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் இவ்விடயம் தொடர்பில் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பெற்றோலிய வளத்துறை அமைச்சின் சந்தைப்படுத்தல் பிரிவு அறிவித்தல் வழங்கியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## முஸ்லிம் திருமணச் சட்டங்களில் விரைவில் திருத்தம் கொண்டுவரப்படும்

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் திருமணச் சட்டங்களில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்படும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

விவாகப் பதிவு மற்றும் விவாகரத்து சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய காசி சட்டத்தின் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

காசி நீதிவான்களுடன் நடத்திய சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் நாடுகளில் இலங்கை காசி நீதிவான்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். காசி நீதிவான்களின் சம்பளங்களை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை இரத்து செய்வதற்கான தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## வடக்கில் ஆயிரத்து 197 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன

(கொழும்பு)

கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட வடக்கில் உள்ள ஆயிரத்து 579 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில், கடந்த மாதம் 31 ஆம் திகதியுடன் ஆயிரத்து 197 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் இருந்த வெடிபொருட்கள் அகற்றப் பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி மீள்குடியேற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 382 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் உள்ள கண்ணி வெடிகளை அகற்ற நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

வடபகுதியில் மேற்கொள்ளப் பட்டு வரும் மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு கண்ணி வெடிகளை அகற்ற வேண்டியது முக்கிய நடவடிக்கை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அமைச்சரின் ஆலோசனையின் பேரில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் கடந்த மாதம் 31 ஆம் திகதி வரை மூன்று இலட்சத்து 51 ஆயிரத்து 772 கண்ணி வெடிகளை அகற்றியுள்ளனர். அத்துடன் மூன்று இலட்சத்து 25 ஆயிரத்து 525 வெடிக்காத வெடி பொருட்களும் இராணுவ தாங்கிகளை அழிக்கும் 874 குண்டுகளையும் மீட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

## மேல் மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் 300 இலட்சம் ரூபாவுக்கும் மேல் வரிநிலுவை

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களில் 300 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட வரி நிலுவையாக உள்ளதென மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

48 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இந்த வரி செலுத்தப்பட வேண்டியுள்ளதாக மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சந்திராணி சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

நிலுவையிலுள்ள வருமான வரி தொடர்பிலான அறிக்கையொன்றை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த அறிக்கை கிடைத்தவுடன் நிலுவையாக உள்ள வருமான வரியை துரித கதியில் அறவிடுவதற்கான திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் ஒத்தேசித்துள்ளது. (ஸ்ரீ-2)

## விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிவரை சென்.நீக்கிளஸ் சன சமூக நிலையத்திலும் காலை 10 மணிமுதல் 11 மணிவரை கலைவாணி முன்பள்ளியிலும் காலை 11 மணி தொடக்கம் 12 மணிவரை கோவில் ஒழுங்கையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை சிவன் பண்ணை வீதியிலும் காலை 10மணி முதல் 11 மணிவரை சீனிவாசகம் வீதியிலும் காலை 11 மணி தொடக்கம் 12 மணிவரை மானிப்பாய் வீதி (சிவன்கோவில் பின்புறம்) யிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## 2011.08 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1807- ரொபர்ட் ஃபுல்ட்டனின் முதலாவது அமெரிக்க நீராவிப்படகு நியூயோர்க்கில் இருந்து புறப்பட்டது. இதுவே உலகின் முதலாவது வர்த்தக நீராவிப்படகு ஆகும்.

★ 1862-லக்கோட்டா பழங்குடியினர் அமெரிக்காவின் மினசோட்டாவில் வெள்ளையினக் குடியேற்றவாதிகள் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

★ 1918-போல்ஷெவிக் புரட்சியாளர் மொயிசேய் யூரீட்ஸ்கி படுகொலை செய்யப்பட்டார்.

★ 1939-த வைசார்ட் ஒஃப் ஒஸ் முதற்தடவையாக நியூயோர்க் நகரில் காண்பிக்கப்பட்டது.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் எட்டாவது வான்படையினர் ஜேர்மனியில் தமது 60 குண்டுவீச்சு விமானங்களை இழந்தனர்.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: வின்ஸ்டன் சேர்ச்சில் பிராங்கிளின் ரூஸ்வெல்ட், கனடா பிரதமர் வில்லியம் லயன் மக்கென்சி கிங் ஆகியோர் கலந்து கொண்ட கியூபெக் மாநாடு ஆரம்பமானது.

★ 1945- இந்தோனேசியா விடுதலையை அறிவித்தது.

★ 1947- இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிக்கும் ராட்கிலிஃப் கோடு வெளியிடப்பட்டது.

★ 1958-பயனியர் சந்திரனைச் சுற்ற அனுப்பப்பட்டது. புறப்பட்ட 77 செக்கன்களில் இது அழிந்தது.

★ 1959- மொன்டானாவில் இடம்பெற்ற 7/5 அளவு நிலநடுக்கத்தினால் குவேக் ஏரி அமைக்கப்பட்டது.

★ 1960- காபொன் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1962- கிழக்கு ஜேர்மனியில் இருந்து பேர்லின் சுவரைக் கடந்து தப்பித்துச் செல்ல முயன்ற 18 வயது பேட்டர் ஃபெக்டர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சுவரைக் கடந்து செல்ல முயன்று இறந்த முதலாவது நபர் இவராவார்.

★ 1969-மிசிசிப்பியில் இடம்பெற்ற சூறாவளியில் 248 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1970-வெனேரா 7 விண்கலம் ஏவப்பட்டது. வேறொரு கோளில் இருந்து (வெள்ளி) வெற்றிகரமாகத் தகவல்களை அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1979-இரண்டு சோவியத் ஏரோபுளொட் வானூர்திகள் உக்ரேன் வான்வெளியில் மோதியதில் 156 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1982- முதலாவது இறுவட்டு CD ஜேர்மனியில் வெளியிடப்பட்டது.

★ 1988-பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா உல் ஹக் மற்றும் பாகிஸ்தானின் அமெரிக்கத் தூதுவர் ஆர்னல்ட் ராஃபெல் ஆகியோர் விமான விபத்தில் கொல்லப் பட்டனர்.

★ 1991- சிட்னியின் புறநகர்ப் பகுதியான ஸ்ட்ராத் ஃபீல்ட் என்னும் இடத்தில் வேட் பிராங்கம் என்பவன் சகட்டுமேனிக்கு சுட்டதில் 7 பேர் கொல்லப் பட்டு 6 பேர் காயமடைந்தனர்.

★ 1999-துருக்கி, இஸ்மித் என்ற இடத்தில் 7.4 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 17 ஆயிரம் பேர் வரையில் கொல்லப் பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1761-வில்லியம் கேரி, ஆங்கில புரட்டஸ்தாந்து மதகுரு (இ.1834)

★ 1963- ஷங்கர், திரைப்பட இயக்குநர்

★ 1975-பிள்ளையான், இலங்கை கிழக்கு மாகாண முதலமைச்சர்

★ 1986-ரூடி கே., அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1786-பிரஷ்யாவின் இரண்டாம் பிரெடெரிக், ரஷ்ய மன்னன் (பி.1712)

★ 1969- லுட்விக் மீஸ் வான் டெர் ரோ, ஜேர்மனியக் கட்டடக்கலைஞர் (பி.1886)

★ 1988- ஸியா உல் ஹக், பாகிஸ்தான் ஜனாதிபதி (பி.1924)


### சிறப்பு நாட்கள்

★ இந்தோனேசியா- சுதந்திர தினம் (1945)

★ காபோன்- சுதந்திர தினம் (1960)

# நவீன எண் சோதிடம்

21



## சிறந்த நிர்வாக சக்தி உடையவர்கள்

### குருவின் பொதுப் பலன்

3,12,21,30 போன்ற தேதியில் பிறந்தவர்கள் எல்லோரும் குரு ஆதிக்கம் கொண்டவர்களே. 3 என்ற எண்ணிற்கு குரு என்றும் ஜோதிடத்தில் வேதகுரு என்றும் அழைக்கப்படுகிறது. "குரு இல்லாத வித்தை சொத்தையாகி விடும்" என்பதைப்போல் குரு ஆதிக்கம் இல்லாத அமைப்பும் குரு அனுக்கிரகம் இல்லாதவர்களின் வாழ்க்கையும் சிறப்படைவது சிரமமே.

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நல்ல ஆசிரியர்களாகவும் நாட்டின் முக்கியமான பொறுப்புக்களை வகிக்கும் நிர்வாகிகளாகவும் சமுதாயத்தைச் சீர்திருத்தும் எழுத்தாளராகவும் தொழில் அதிபர்களாகவும் திகழ்வர். இவர்கள் இயற்கையிலேயே நீதி நேர்மை நிதானம் நடுநிலைமை முன் பின் நடப்பதை ஆராய்ந்து செயற்படுதல் வெற்றி தோல்வியால் மனம் மயங்காதிருத்தல் போன்ற் கொள்கைளை மேற்கொண்டு வாழ்வர்.

ஓரளவு உயரமாகவும் மெழுகி விட்டாற்போல் தசைப்பற்றும் உள்ளளவர்களாகக் காட்சியளிப்பர். சிந்தனை ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு இளமையிலே வழுக்கை விழுந்துவிடும். எளிதில் யாரிடமும் ஏமாறாத இவர்கள் யாரையும் ஏமாற்றும் எண்ணமும் இல்லாதவர்கள் இவர்களுக்கு நல்ல நண்பர்கள்உண்டு.

* * *

### உடல் எண் 3 உயிர் எண் 1

3,12,21,30 போன்ற தேதியில் பிறந்து தேதி,மாதம்,வருடம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் இவர்கள் குரு, சூரி ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்களில் பலர் அரசாங்க

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

உத்திரோயகத்திலும் சிலர் தொழில் செய்து கொண்டும் இருக்கின்றனர். இயற்கையிலேயே நேர்மையான குணம்கொண்ட இவர்கள் தம் மனதிற்குப் பிடிக்காத எக்காரியங்களிலும் ஈடுபட மாட்டார்கள். மனச் சாட்சியைத் தெய்வமாக நினைக்கும் இவர்கள் சில பிரச்சினைகள் வரும் போது மனத்துணிவுடன் செயற்படுவர்.

அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னுடைய மேலதிகாரிகளின் கட்டளைகளுக்குப் பணிந்து நடப்பர். ஆனால் அடிமையாக நினைத்து விரட்டினால் எதிர்க்கவும் தயாராக இருப்பர். சில பிரச்சினைகளை விவாதிக்கும் போதும் சிலருடைய வழக்குகளை பஞ்சாயம் செய்கின்ற போதும், ஒரு சாராருக்குச்சார்ந்து பேசாமல் நடுநிலையாக நின்று நேர்மையாகப் பேசும் நல்ல மனம் கொண்டவர்கள்.


இவர்கள் நடுத்தரமான உயரமாகவும் இலேசாகக் கண் சிவந்து கருணை ஒளி வீசும் கண்ணுடையவராகவும் விளங்குவர். புருவங்கள் வரைந்தது போல் இருக்கும். இலேசாக முடி சுருண்டிருக்கும். உஷ்ணம அதிகம் கொண்டவர்களாதலால் முடி உதிரும். இதனால் குளிர்ச்சிக்கு மருந்து தேடுவார்கள். உண்மையான அன்பு கொண்ட இவர்கள் இதயத்தால் பழகுபவர்கள். பிறரது கஷ்டத்தையும் கண்டு மனம் இரங்கி உதவ முன்வருவர். தன்னை நாடி வருபவர்களை வரவேற்று உபசரிக்கும் இவர்கள் போலியாகப் பேசத் தெரியாத காரணத்தால் மற்றவர்கள் பொல்லாதவர் என்று எண்ணும் அளவிற்கு இருப்பர்.

சிறந்த நிர்வாக சக்தியும், பலரைக் கட்டிக்காகக்கும் திறமையும் கொண்ட இவர்கள் பிறந்த தேதிக்குத் தகுந்தவாறு பெயர் அமைந்துவிட்டால் பொன், பொருள் மனைவி, மக்கள், ஆரோக்கியம் ஆகியவற்றைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழுவர். இதனால் வாசகர் இந்த எண்ணிற்கு பொருத்மான, பின்னால் கொடுக்கப்பட்ட எண்களில் பெயரை அமைத்துக் கொள்வது அவசியம். இவர்கள் அனேகமாக கடைகள், கல், நெருப்பு , உலோகம் சம்பந்தமான தொழில்களைச் செய்து பெரும் பணம் சம்பாதிக்கின்றனர். இயற்கையிலேயே இவர்களுக்கு பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் நல்ல கல்வியும், பேரறிவும் பெற்றுச் சிறந்த உத்தியோகத்தை வகிக்கின்றனர். தனது திறமையாலும், நிர்வாக சக்தியாலும் உயர் பதவிக்கு மாற்றப்படுகின்றனர். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் மேற்படிப்பு படித்து நேர்மையான அதிகாரிகளாக இருப்பர்.

இன்னும் சிலர் சிறிய உத்தியோகத்தில் இருந்தாலும் அவர்களும் கண்ணியமாக இருந்து பெரியோரை மதித்து வாழ்க்கையில் உயருகின்றனர்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT





தொழில்

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் இருந்தாலும், மற்றொரு வருமானம் வருகின்ற வாய்ப்பு உண்டு. உத்தியோகம் அல்லாதவர்கள் உலோகம், நெருப்பு, கல்,மரம் போன்றவை சம்பந்தமான தொழில்கள் செய்வதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெறலாம். கடைகள் வைப்பதன் மூலமும் செல்வம் சேரும். இவர்கள் பெயர் பிறந்த தேதிக்கு பொருத்தமானதாக அமையாவிட்டால், மேற்குறிப்பிட்ட பலன்கள் எல்லாம் நடக்காது.

நோய்

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு உடலில் அதிக உஷ்ணம் இருப்பதால் உஷ்ணம் சம்பந்தமான அனைத்து வியாதிகளும் வர வாய்ப்புள்ளது. சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு, கண் நோய் வராமல் தடுப்பதற்கு உப்பு, சர்க்கரை இவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். 9 எண்ணிக்கையைச் சார்ந்த 45 எண் வரகின்ற மாதிரி பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால் நோய் குணமாகும். செல்வம் விருத்தியாகும்.

**பெயர் அமைக்கும் முறை**

பொதுவாக 3 எண்ணிக்கைக் கார்களுக்கு 3 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொள்வது நல்லது. ஆனால், கூட்டு எண்ணாகிய 1 வருவதால் 1 எண் வருகின்ற மாதிரியும் பெயரை அதைத்துக் கொள்ளலாம். உதாரணமாக 3 எண்ணிக்கையில் 21,39 போன்ற எண்ணிக்கையிலும் 1 எண்ணிக்கையில் 19, 46, 64 போன்ற எண்ணிக்கையிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 3,1

யோகமான தேதிகள்- 3,12, 21,30; 9,18,27; 1,10,19,28

யோகமான மோதிரக்கல் - தங்கபுஷ்பராகம், கனக புஷ்பராகம், எமிதிஸ்டு

யோகமான நிறம்-ரோஷ், ஒரேஞ், கத்தரிப்பூநிறம், நீலம், மஞ்சள்.

ஆகாத தேதிகள்- 6,15,24

ஆகாத நிறம்- கறுப்பு,பச்சை

### கற்களும் நற்பலன்களும்




**பிலட் ஸ்டோன்**

இது கரும் சிவப்பு நிறம் கொண்டது எலும்பு வளர்ச்சிக்கும் குடல் நோய் நிவர்த்திக்கும் சிறந்தவை. ஆனால் அதிர்ஷ்டத்தைக் கொடுக்காது.

**வெள்ளை புஸ்பராகம்**

இதை அணிவதால் சமாதானம், மன அமைதி, நல்ல தூக்கம் உண்டாகும் யாரும் அணியலாம். நல்லகற்கள் வைரம் போன்று காட்சியளிக்கும்.

(தொடரும்)





மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஆவணித் திரு விழா நேற்று முன்தினம் மடுத்திருப்பதியில் நடைபெற்றது. மடுமாதாவின் திருச்சுருப பவனியையும் திருவிழாவில் பங்கேற்ற மக்களையும் படங்களில் காணலாம்.

# கடவுச்சீட்டு மோசடி செய்த நபர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைப் பகுதிகளைச் சேர்ந்த வயது குறைந்த சிறுமிகள் ஆறு பேரின் வயதை கடவுச்சீட்டு தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்ட ஒருவரை மருதானைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சவுதி அரேபியாவில் தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரிசானாவும் இவ்வாறே வயது குறைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட ஒருவராவார். இது விடயமாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# அனர்த்த வேலைத்திட்டத்தை தயார்படுத்தல் செயலமர்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அனர்த்த வேலைத் திட்டத்தை தயார்படுத்தல் மற்றும் பதிலிறுப்பு தொடர்பான செயலமர்வு நாளை காலை 9 மணிக்கு மன்னார் கச்சேரியில் மன்னார் மாவட்டஅரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளதென மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எம்.ஏ. சி.எம். றியாஸ் தெரிவித்துள்ளார்.

இச் செயலமர்வில் மன்னார் மாவட்டத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு, வரட்சி, சுனாமி போன்ற அனர்த்தங்களின் முன் ஆயத்தம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் வேலைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இதில் அனர்த்தமுகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் நாயகம், திணைக்கள தலைவர்கள் அரசசார்பற்ற நிறுவன தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3)

# மாநகரசபை முதல்வராக போதிய தகுதிகள் உண்டு

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையின் முதல்வர் பதவியை வகிக்க தனக்கு போதுமான தகுதிகள் இருப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிரமங்களுக்கு உள்ளான மக்கள் ஒரு போதும் தம்மை கைவிட்டு செல்லவில்லை எனவும் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தமது கட்சி போட்டியிடுமானால் தாம் கட்டாயம் கொழும்பு மாநகரசபையின் முதல்வர் பதவிக்கு போட்டியிடபோவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக தமது நட்பு கட்சிகளான புதிய இடதுசாரி முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும் இந்த பேச்சு வார்த்தைகளின் படி கொழும்பு மற்றும் தெஹிவளை-கல்கிசை மாநகரசபைகளுக்கு போட்டியிட வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# தமிழினியை 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன் னாள் மகளிர் அணி பொறுப்பாளர் தமிழினியை எதிர் வரும் ஓகஸ்ட் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று முன் தினம் உத்தரவிட்டார்.

தமிழினி தொடர்பாக சட்டமா அதிபருக்கு தாம் அனுப்பிய அறிக்கைக்கு சட்டமா அதிபரிடமிருந்து இன்னும் அறிவுறுத்தல் கிடைக்கவில்லை என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் தெரிவித்து சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கோரினர்.

அதையடுத்து தமிழினியை எதிர்வரும் ஓகஸ்ட் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## வயிற்றுப்புண்ணும் மூலிகை மருத்துவமும்

*தொடர்ச்சி*

♦வில்வம் பிஞ்சை கோது நீக்கி சதையை அரைத்து 2 தொடக்கம் 6 கிராம் அளவு 30 மி.லீற்றர் புளிக்காத தயிரில் கலந்து தினமும் காலையில் கொடுக்கலாம்.

♦ வெள்ளறுகுச் செடிகளை வேருடன் பிடுங்கி நன்கு கழுவி நிழலில் உலர்த்தி பொடி செய்து காரிக்கன் துணியில் அரிந்து 2 தொடக்கம் 4 கிராம் அளவு காலை மாலை வெந்நீர் பனங்கட்டியுடன் சாப்பிட்டுவர வயிற்றுப்புண் நீங்கும்.

♦ மூங்கில் அரிசியை வெண்பொங்கலாகவும் சீனி சேர்த்து பாயாசமாகவும் பருகலாம், மூங்கிலில் காட்டுமூங்கில் என்ற ஒரு இனம் உண்டு. மூங்கிலரிசி வயிற்றுப்புண்ணிற்கும், நீரழிவிற்கும் சிறந்ததாகும்.

♦சாத்தவாரி கிழங்குச் சாறு (உடன் வேர்க் கிழங்குச்சாறு) 15 மி.லீற்றர் 30 மி.லீற்றர் தேனில் கலந்து சாப்பிட்டுவர இந்நோய் அகலும்.

♦ வெண்பூசணிச்சாறு தினமும் வெறு வயிற்றில் ஒரு டம்ளர் (200 மி.லீற்றர்) அருந்தி வரலாம்.

♦ கற்றாழைச் சதை (நன்கு நீரில் கழுவிய பின்பு) ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து பனங்கற்கண்டு சிறிது கூட்டி காலையில் வெறும் வயிற்றில் தொடர்ந்து 3 கிழமைகள் சாப்பிட்டு வரவும்.

♦ உலர்ந்த வில்வ இலைகளை பொடித்து அரித்து ஒன்று தொடக்கம் 2கிராம் தினமும் காலை, மாலை மோரில் சாப்பிட்டு வரவும்.


**வயிற்றுப் புண்ணை நீக்கும் கீரை வகைகள்,**

வெந்தயக் கீரை


கொத்தமல்லிக் கீரை

புதினாக்கீரை


மிளகுதக்காளிக் கீரை



சாத்தாவாரி



கற்றாளை



மூங்கில்

அகத்திக் கீரை

பிரண்டைத்துளிர்

♦ இவற்றை விட, அத்திப்பழம், நெல்லிக்கனி, மாதுளம்பழம், இதரை வாழைப்பழம், இவற்றை அதிகம் சேர்த்துக்கொள்வதால் வயிற்றுப்புண் நீங்கும்.

♦கோவா அல்லது முட்டை கோசை சமைத்து சாப்பிடவும். போதியளவு சிறிய வெங்காயத்தை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் இந்நோய் தீரும்.

♦மோரை தினமும் அருந்தி வரவும். தினமும் கரட் யூஸ் அருந்திவருவது நல்லது.

♦ கணு நீக்கிய பிரண்டையை கீற்றுகளாக்கி நெய்விட்டு வதக்கி பூண்டு, சீரகம், உளுத்தம் பருப்பு இவைகளை சேர்த்து துவையல் செய்து சாப்பிடுவதன் மூலம் இந்நோயிலிருந்து நிவாரணம் பெறலாம்.

♦வில்வ இலைகளை ஒரு கைப்பிடியளவு எடுத்து 100 மில்லி தண்ணீர் கலந்து 12 மணிநேரம் ஊறவைத்து நாள்தோறும் நான்கு வேளை குடிக்க வயிற்றுப்புண் தீரும்.

♦மணத்தக்காளி இலை/ புதினா இலை ஒரு கைப்பிடியளவு எடுத்து இரண்டு டம்ளர் நீர் விட்டு, ஒரு டம்ளராக சுண்டக்காய்ச்சி காலை உணவிற்கு முன்பு தினமும் அருந்திவர வயி ற்றுப்புண் அகலும்.

♦இந்நோயின் தாக்கத்தை குறைக்க இளஞ்சூட்டு வெந்நீரில் (ஒரு டம்ளர்) திருநீற்றுப் பச்சை இலைகள் 5,6 சேர்த்து ஊறவிட்டு வடித்து அருந்துவதன் மூலம் வயிற்றுப்புண் அகலும்.

♦புளியாரைக் கீரையை வாரத்தில் இரு முறை சமைத்துச் சாப்பிடலாம். அல்லது புளியாரைக்கீரை நன்கு அரைத்து 5 கிராம் அளவு(பாக்களவு) தினமும் ஒரு டம்ளர் மோரில் கலந்து சாப்பிட்டு வர வயிற்றுப் புண் நீங்கும்.

♦பச்சைக் கொய்யா இலையை ஒன்று கழுவி இடித்து சாறு எடுத்து 15 தொடக்கம் 30 மில்லிலீற்றர் அளவு காலை, மாலை அருந்தி வரவும்.

♦மாதுளம் பழக்கோதுகளை நன்கு உலர்த்தி இடித்து அரித்து 2 தொடக்கம் 4 கிராம் அளவு மோரில் கலந்து குடித்தால் வயிற்றுப்புண் நீங்கும்.

♦பனிச்சை பழங்களை உண்டு வந்தாலும் வயிற்றுப்புண் ஆறும், ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் பனிச்சை பழங்கள் பெறலாம்.

♦ இரசாயனக் கலவைகள் சேர்ந்த, குளிரூட்டப்பட்ட மென் பானங்களை தவிர்த்து, உடன் தயாரித்த திராட்சை யூஸ், மாம் பழ யூஸ், நன்னாரியூஸ், புளித்தோடை யூஸ், பொழுத் தோடை யூஸ், மாதுளம்பழ யூஸ், பப்பாளி யூஸ், தக்காளி யூஸ், கரட் யூஸ் ஆகியவற்றை வீட்டிலேயே தயாரித்து கொள்ள பழகிக் கொள்ள வேண்டும்.


குறிப்பு:-

மேற்குறிப்பிட் சகல மூலிகைகள், பழவகைகள், கீரை வகைகள் அனைத்தும் எமது பிரதேசத்திலேயே போதியளவு பரவிக் காணப்படுகின்றது. அதிமதுரம் மட்டுமே வேராக (உலர் சரக்காக) தமிழ் மருந்துக்கடைகளில் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.


எனவே இலகுவில் கிடைக்கக் கூடியதும்,

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி


மலிவானதும், பக்கவிளைவுகளற்றதுமான மூலிகைகளை உணவாகவோ, மருந்தாகவோ பயன்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். இதனால் நோய்களிலிருந்து விடுபடவும், நோய்கள் எம்மைத் தாக்காது பாதுகாத்துக் கொள்ளவும், நொய்களின் உபத்திரவங்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கிய வாழ்வை வாழமுடியும்.


23) 

சதுரவடிவக் கடதாசி ஒன்றை நான்காக மடித்து உருவில் வெட்டப்பட்டது. பின்னர் அவற்றை விரித்துப் பார்க்கும்போது தோன்றும் சரியான விதத்தை விடையிலிருந்து தெரிவுசெய்க.






♣ கீழுள்ள தாயக்கட்டடையின் அமைப்புகளை அவதானித்து 24ஆம், 25ஆம் வினாக்களுக்கு விடை தருக.




24) 


பக்கத்திற்கு எதிர்ப்பக்கம் எது?





25) 

பக்கத்திற்கு எதிர்ப்பக்கம் எது?





26) 



இவ்வுருவை A என்ற அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும்போது தோன்றும் விதம்.





27) B என்ற அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும்போது தோன்றும் விதம்.




♣ பின்வரும் தரவுகளை அவதானித்து 28ஆம், 29ஆம் வினாக்களுக்கு சரியான விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.



| | | | |
|---|---|---|---|
| 55g | 45g | 50g | 40g |




28) மேற் காணப்படும் பழங்களுள் நிறை கூடிய பழம்?

.........................


29) மாதுளையின் நிறை யாது?

.........................

30) இரண்டு மனிதர்கள் 6m நீளம், 3m அகலம் கொண்ட சுவருக்கு வாணம் பூச 3 நாட்கள் எடுக்கும். 3m நீளம், 3m அகலம் கொண்ட சுவரை அதே வேகத்தில் ஒரு மனிதன் பூச எத்தனை நாட்கள் எடுக்கும்?

1. 1 நாள் 2. 3 நாட்கள் 3. 6 நாட்கள்

31) X - பழங்களையும், Y - மாம்பழங்களையும், Z - அப்பிள் பழங்களையும் குறிக்கின்றன. இவற்றிற்கிடையில் சரியான தொடர்பைக் காட்டும் உரு எது?




32) ஒரு மைதானத்தில் இரண்டு கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. அதில் ஒரு கம்பத்தின் நிழல் 24m கரட் நீளமுடையதாகக் காணப்பட்டது. 3m உயரமுள்ள கம்பத்தின் நிழல் 4m ஆக இருக்கிறது. எனின், முதற் கம்பத்தின் உயரம் என்ன?

1. 6m 2. 18m 3. 23m

♣ 33ஆம், 34ஆம் வினாக்களில் சில சம்பவங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்காகக் காட்டும் விடையின் கீழ்க் கீறிடுக.

33) அ - எழும்ப எனக்கு விரும்பமில்லாமல் இருந்தது.

ஆ - என்று அப்பா சத்தமிட்டார்.

இ - ஆயினும் கண்கள் இரண்டையும் கசக்கிக் கொண்டெழுந்தேன்.

ஈ. - நன்றாக விடிந்து விட்டது எழும்பு


உ - கிணற்றிற்குச் சென்று முகம், கை, கால் கழுவிக் கொண்டேன்.

1. ஈ, ஆ, அ, உ, இ 2. அ, ஈ, ஆ, இ, உ 3. ஈ, ஆ, அ, இ, உ

34) பெட்டி ஒன்றில் 4 மஞ்சள் நிறப்பந்துகள், 3 சிவப்பு நிறப் பந்துகள் உள்ளன. அவற்றில் சிவப்பு நிறப் பந்துகளைக் கண்ணை மூடியவாறு எடுப்பதற்கு ஆகக் கூடியது பெட்டியிலிருந்து எத்தனை பந்துகளை வெளியே எடுக்கவேண்டும்.

1. 3 2. 4 3. 5

♣ விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.





35) முக்கோணத்திற்கு மட்டும் உரித்தான இலக்கம் என்ன?

.........................

36) மிக அதிகமான பெறுமதி எந்த வடிவத்திலுள்ளது?

.........................

37) செங்கோணங்களைவிட பெரிய கோணத்தை அதிக அளவு கொண்டுள்ளது எந்த வடிவம்?




38) விளையாட்டு ஒன்றிற்காக மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக வரிசையில் நின்றனர். விமலிற்கு முன்னால் ஒன்பது பேரும் அக்ரமிற்கு பின்னால் எட்டுப் பேரும் நின்றனர். விமலுக்கும் அக்ரமிற்கும் இடையில் ஏழு பேர் நின்றனர். அவ் வரிசையில் நின்ற மாணவர்கள் எத்தனை பேர்?

1. 24 பேர் 2. 26 பேர் 3. 27 பேர்

♣ 39ஆம், 40ஆம் வினாக்களிற்குரிய விடை தருக.

39) உருவத்தைக் காட்டுவான் கண்ணாடியும் அல்ல, சொல்வதை செய்திடுவான். குரங்கும் அல்ல. அவன் யார்?

.........................................

40) கொண்டை அணிந்த ஆண்பிள்ளை கூவி அழைத்தால் ஊரே விழித்தெழும். அது என்ன?

.........................................






வல்லை விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணியை தோற்கடித்து சக்கோட்டை சென். சேவியர் அணி வெற்றி பெற்றுள்ளது.

இதில் வெற்றி பெற்ற அணித் தலைவரிடம் வல்லை விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் வீரர் மாசிலாமணி வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் வெற்றி பெற்ற அணியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- கரவெட்டிச் செய்தியாளர்)*

# இலங்கை போர்க்குற்ற விசாரணைக்கு கனடா ஆதரவளிக்க வேண்டும்

## கனேடிய பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை

(கொழும்பு)

கனேடியப் பாதுகாப்பு அமைச்சரிடம் சனல்- 4 போர்க்குற்றக் காணொளி நேரடியாக வழங்கப்பட்டு கனடா யுத்தக் குற்றவாளிகளை நாடு கடத்துவதைப் போல இலங்கை தொடர்பான யுத்தக் குற்ற விசாரணைகளிலும் தன்னை ஈடுபடுத்தி மனித உரிமைகள் விவகாரத்தில் முன்மாதிரியாகத் திகழ வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கனேடியப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர்களின் பிரச்சினைகளில் தன்னை ஈடுபடுத்தி உழைப்பவருமான பற்றிக் பிரவுண் அவர்களினால் புற்றுநோய் சிகிச்சைகளுக்கான மஸ்கோகா என்ற பிராந்தியத்தின் செயற்பாடுகளுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில் அனுசரணையாளர்களாகக் கலந்து கொண்ட கனேடிய மனித உரிமை மையம் மேற்படி சந்திப்பை மேற்கொண்டது.

அத்தோடு அந்நிகழ்வில் கலந்து கொண்ட விளையாட்டுத்துறை மத்திய அமைச்சரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பால் கோசல் மற்றும் சுமார் 25 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கன்சவேட்டிவ் கட்சியின் வேட்பாளர்களுக்கும் இதர பிரமுகர்களுக்கும் காணொளி வழங்கப்பட்டதுடன் இலங்கையின் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்ற விவகாரங்கள் தொடர்பான விடயங்களில் கனடா தன்னை ஈடுபடுத்துவதற்கு உதவி புரிய வேண்டுமெனக் கேட்கப்பட்டது.

கனேடிய மனித உரிமை மையத்தின் தொண்டர்களுடன் ஆளும் கன்சவேட்டிவ் கட்சியின் வேட்பாளர்களும் இணைந்து இந்த விளக்கங்களைக் கொடுத்ததால் இவ்விவகாரம் குறித்த விபரங்களை மிகவும் உன்னிப்பாக அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டதுடன் தாங்கள் இந்த விவகாரத்தை ஆராய்வதாக கனேடிய மனித உரிமை மையத்திடம் உறுதியளித்தனர்.

கன்சவேட்டிக் கட்சியுடன் நட்புறவை பேணும் இதர தமிழர் அமைப்புக்களும் தனிநபர்களும் ஒரு நேர்மையான உறவை ஏற்படுத்தி அக்கட்சியின் அரசாங்கத்தினூடாக எமது பிரச்சினையை மையப்படுத்த தம்முடன் ஒன்று சேர்ந்து பணியாற்ற வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்த 900பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நிர்ணய விலையைவிட அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்த 900 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த சில நாட்களாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களை அடுத்து குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் கூறியுள்ளார்.

50 கிலோகிராம் எடையுள்ள சீமெந்து மூடையொன்றின் நிர்ணய விலை 750 ரூபாவாகும்.

இதேவேளை, சீமெந்து மூடையின் விலையை அதிகரிப்பதற்கான அனுமதியை வழங்குமாறு சீமெந்து நிறுவனங்கள் சில நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில் எதிர்வரும் சில நாட்களில் கலந்துரையாடப்பட்டு தீர்மானிக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் ரூமி மர்ஷூக் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிவித்தல்

**புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள்**

- *பட்டப்பின் கல்வி டிப்ளோமா-(பகுதி நேரம் 2009/2011 & முழுநேரம் 2009/2010)*
- *உடற்கல்வி டிப்ளோமா-2011/2012*

ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டிருந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சையும், உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பித்து எழுத்துப்பரீட்சை மற்றும் உடற்தகைமை தகுதிகாண் பரீட்சை ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சையும் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

| கற்கைநெறி | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| பட்டப்பின்கல்விடிப்ளோமா-(பகுதி நேரம் 2009/2011 & முழு நேரம் 2009/2010) | 23.08.2011 (செவ்வாய்)<br>24.08.2011 (புதன்) | மு.ப.9.30-பி.ப. 4.00<br>மு.ப.9.30-பி.ப. 4.00 | பீடாதிபதி அலுவலகம், கலைப்பீடம். யாழ். பல்கலைக்கழகம் |
| உடற்கல்வி டிப்ளோமா-2011/2012 | 22.08.2011 (திங்கள்) | மு.ப.9.00-பி.ப. 1.00 | சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகம். மாணவர் நிலையம், யாழ். பல்கலைக்கழகம். |

நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற தகுதியானவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்காதோர் அனுமதிகள் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அவர்களுடன் 021 222 6714 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
16.08.2011

(சி-4066)



# தென்மராட்சி பனை தென்னை வள அ. கூ.சங்கங்களின் கொத்தணி, வரணி

## பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல்

பதவி :-வடிசாலை முகாமையாளர் (நிரந்தரம்)
குறியீட்டு இலக்கம் :-115/10
சம்பள அளவுத்திட்டம் :- 10700-13200
120X10-130X10 (சுற்று நிரூப இல.66/2006 இன்படி)

மேலே குறிப்பிட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுற்று நிரூபம் :- 108/81 (115/08)

**தகைமைகள்:-** அ) கூட்டுறவுச்சங்க ஊழியர் 11ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றி பதவியொன்றில் மூன்று வருடங்களிற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12ஆம் சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றி 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்கு சமமான தகைமைகள்.

இ) கூட்டுறவுச்சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த. உயர்தரம் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றிய 03 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை :-18-45 இற்கு இடைப்பட்டவர்கள்

ஏனைய விபரங்கள்:-

அ) கொத்தணியினால் வழங்கப்படும் விண்ணப்பங்களை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

ஆ) மேலே காணப்படும் பதவிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை கட்டணம் செலுத்தி பெற்று உரிய வகையில் பூர்த்தி செய்து அவசியமான இணைப்புக்களுடன் 30.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வர்ணி' என்ற முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கபெறும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

இதற்போது கூட்டுறவு சேவையிலுள்ள பணியாளர்களிற்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

ஈ)தற்போது கூட்டுறவு சேவையிலுள்ளவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தங்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

உ) விண்ணப்ப முடிவுத் திகதி 30.08.2011

ஊ) சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி-4059)

**தலைவர் .**






உதயன் செய்தியாசிரியர் ஞா.குகநாதன் இனந்தெரியாத நபர்களினால் அண்மையில் தாக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ்.பேருந்து நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது... (படங்கள்:-அ.சாள்ஸ்)

# யாழ்.மாவட்டத்தில் செப்டெம்பரில் குடிசைக் கைத்தொழில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து வாழ்வெழுச்சி மனைப் பொருளாதார தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 6 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

திவி நெகுமவென அழைக்கப்படும் மனைப் பொருளாதார தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் குடிசைக் கைத்தொழில் கண்காட்சியும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் மாதம் 10,11 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஆரம்ப கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, கைத்தொழில் வணிக அமைச்சு, ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்ப அமைச்சு, இளைஞர் விவகார சிறுவர் அபிவிருத்தி அமைச்சு, அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அமைச்சு ஆகிய 5 அமைச்சுக்கள் இணைந்தே இந்தக் கண்காட்சியை நடத்தி வருகின்றன.

இந்த குடிசைக் கைத்தொழில் கண்காட்சியானது ஏற்கனவே கொழும்பில் நடைபெற்று எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

இக் குடிசைக்கைத்தொழில் கண்காட்சியில் பங்கு பற்றுவதன் மூலம் தமது உற்பத்திகளுக்கான நிலையான சந்தைவாய்ப்பை பெற்றுக் கொள்ளவும் ஏனைய நிதி நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தவும் மேலதிக தொழிற்பயிற்சியை பெறவும் முடியும்.

இதில் பங்கு பற்றுபவர்களை தெரிவு செய்யும் பொறுப்பு யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு அவருடன் பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வடிவமைப்புச் சபை அதிகாரிகளும் ஈடுபடவுள்ளனர்.

வறுமைக்கோட்டின் கீழுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் அதே சந்தர்ப்பத்தில் கண்காட்சியில் ஊக்கத்துடனும் அக்கறையுடனும் தமது ஆக்கங்களை காட்சிப்படுத்தக் கூடியவர்களே உறுதிப்படுத்தப்பட்ட பின்பே தெரிவு செய்யப்படுவார்கள்.

மேலும் இக் கண்காட்சியில் தமது திறமைகளை நிரூபிப்பவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் அத்தொழிலை தொடர்ந்து மேற்கொள்ளக்கூடியவாறு தொழில் உபகரணங்களும் அதற்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

எனவே மஹிந்த சிந்தனையின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்த திவிநெகும திட்டமானது பெருவெற்றியடைய அனைவரும் அக்கறையுடன் செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில்பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, அமைச்சின் பணிப்பாளர் திருமதி ஜஸ்ரின் வண்ணப்பெருமா, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பதில் பணிப்பாளர் எஸ். கெங்காதரன் பிரதேச செயலர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஶ்ரீ-6)

# புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் நியமனம்

(கொழும்பு)

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சிங்க படையணியின் சிரேஷ்ட உறுப்பினராவார்.

இறுதிக் கட்ட போரின் போது கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளை புனர்வாழ்வு ஆணையகம் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை காலமும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வியைத் தொடர்வதற்காக சுதந்தரணசிங்க வெளிநாட்டுக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

# ரிசானாவுக்கு போலி ஆவணம் தயாரித்து கொடுத்த உப முகவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கின் கடவுச்சீட்டில் வயது மாற்றப்பட்ட விவகாரத்துடன் தொடர்புடையதான உபமுகவர் நேற்று முற்பகல் கொழும்பில் வைத்து பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரிசானாவின் வீட்டுக்கு அருகில் குடியிருக்கும் மேற்படி சந்தேக நபரே ரிசானாவின் வயதை மாற்றி போலி ஆவணங்களைத் தயாரிக்க காரணமாகியுள்ளார் எனவும் ரிசானா சவுதிக்கு பணிப்பெண்ணாக செல்வதற்கு இவரே அனைத்து உதவிகளையும் செய்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

இந்நிலையில் மேற்படி சந்தேக நபரை பின்தொடர்ந்துள்ள பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் அவரை கொழும்பில் வைத்து கைது செய்ததாக தெரிவித்தனர்.

ரிசானாவின் கடவுச்சீட்டில் வயது மாற்றப்பட்டுள்ளமை தொடர்பில் அவரின் தாயாரான பரினாவினால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (ஶ்ரீ-2)

# மர்ம மனிதனுடன் மோதலில் ஈடுபட்ட குடும்பஸ்தர் படுகாயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு காரைதீவு பிரதேசத்தில் மர்ம மனிதர் ஒருவருடன் குடும்பஸ்தர் ஒருவர் நேரடியாக மோதலில் ஈடுபட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இச்சம்பவத்தில் மர்மமனிதரின் வெட்டுக் கீறல் காயங்களுடன் அதே யிடத்தைச் சேர்ந்த 54 வயதுடைய விநாயகமூர்த்தி இராசலிங்கம் என்பவர் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டார்.

இதன்போது மர்மமனிதர் அவரது வீட்டு வெளி மதில் சுவரோடு சாய்ந்து ஒளிந்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளானவர் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். (ஶ்ரீ-2)

# கிழக்கில் மக்களை தெளிவுபடுத்த பொலிஸார் விசேட செயற்றிட்டம்

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வதந்திகள் பரவுகின்றமை மற்றும் உண்மைக்குபுறம்பான சம்பவங்களினால் ஏற்படும் அமைதியின்மையை தடுப்பது ஆகியன தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்கான விசேட செயற்றிட்டமொன்றை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

பாதுகாப்பு செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே மட்டக்களப்பிலுள்ள 12 பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த செயற்றிட்டமானது மக்களின் நம்பிக்கையை வெற்றி கொள்வதற்கான முக்கியத்துவம் மிக்க நடவடிக்கையாகும் என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார்.

மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் வகையில் வதந்திகளை பரப்பும் சிலர் அதனை பயன்படுத்தி பல்வேறு சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றமை தெரியவந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# துணுக்காய் கல்வி வலயத்திற்கு 6 உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கு 6 உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல். இளங்கோவனால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக இருந்த க.சக்திகரன் முறைசாரா கல்விப் பாடத்திற்கும் துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகர்களாக இருந்த சே.நவரட்ணராஜா விஞ்ஞான பாடத்திற்கும் திருமதி இ.கௌரிபுத் திரி தமிழ் பாடத்திற்கும் திருமதி ஞா. பத்மநாதன் ஆரம்பக்கல்விப் பாடத்திற்கும் எஸ். ரவீந்திரகுமார் கணித பாடத்திற்கும் எஸ்.ரவீந்திரன் உடற்கல்வி பாடத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபால தெரிவித்துள்ளார்.

பல மாதங்களாக மேற்படி பதவிகளுக்குரிய அதிகாரிகள் இல்லாமையால் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் தடைகள் ஏற்பட்டிருந்தன.

எனவே இந்நியமனங்கள் மூலம் ஏற்பட்டிருந்த கல்வி அபிவிருத்தித் தடைகள் நீக்கப்பட்டதையடுத்து பெற்றோர்கள் வடக்கு மாகாண கல்வி செயலாளருக்கு தமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-15)

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். - லா புரூயர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஏய்! கிறீஸ் பூதமே! நீ படைத்தவனைப் பதம் பார்க்காயோ!

கிறீஸ் பூதம் பற்றிய செய்தியால் நாடு களேபரம் அடைந்துள்ளது.

வடபுலத்தில் அந்தப் பயங்கரம் இன்னும் இல்லாமையால் அது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் நாம் இருக்கின்றோம்.

ஆனால் கிழக்கு மாகாணமும் மலையகமும் கிறீஸ் பூதத்தால் அதிர்ந்து போயுள்ளன.

முன்பெல்லாம் புளியமரத்தின் உச்சியில் பேய் நிற்பதான கதைகள் கூறப்படுவதுண்டு.

இரவில் திரிபவர்களுக்கு கட்டுப்பாடு விதிப்பதற்காக அந்தப் பேய்க் கதை கூறப்பட்டிருக்கலாம்.

ஆனால், இப்போது கிறீஸ் பூதம் பற்றிய கதைகளால் மக்கள் நிம்மதியாக உறங்க முடியாத பரிதாபத்தில் உள்ளனர்.

புளியமரத்தில் நின்ற பேய்களுக்கும் இப்போது பேசப்படும் பூதங்களுக்கும் இடையே தொடர்பு இருக்குமா? என்று யாரும் சந்தேகிக்கத் தேவையில்லை. அந்தப் பேய்கள் வேறு. இந்தப் பூதங்கள் வேறு. இந்தப் பூதங்கள் மனிதப் பூதங்கள். மனிதப் பூதங்களா எப்படி? என்று நீங்கள் கேட்கலாம்.

ஆம்! சக்தியுள்ள மனிதர்களால் படைக்கப்பட்ட பூதங்களே இந்த கிறீஸ் மனிதப் பூதங்களாகும்.

இந்தப் பூதங்கள் தங்களுக்கு இடப்பட்ட வேலைகளைச் செய்தனவோ இல்லையோ மக்களிடையே ஒற்றுமையை-விழிப்புணர்வை ஏற்படுத்தி விட்டன.

ஆக, படைத்த பூதம் இட்ட கட்டளையை முடிக்காவிட்டாலும் படைத்தவனைப் பதம் பார்த்து விடும்போல் தெரிகிறது.

அசுரன் ஒருவன் சிவனை நோக்கி கடும் தவம் இருந்தான். தவத்தின் வலிமை கண்டு, சிவன் வரம் கொடுக்க அவன் முன் தோன்றினார்.

மகனே! உன் தவ வலிமை கண்டு மகிழ்வுற்றோம். வரம் கேள் தருவோம் என்றார் சிவன்.

சுவாமி நான் எதைத் தொட்டாலும் அவை பற்றி எரிய வேண்டும்.

இந்த வரத்தை நீங்கள் தந்தருள வேண்டும் என அசுரன் கேட்டான்.

சிவனும் எதையும் சிந்தியாது வரத்தைக் கொடுத்தருளினார். சிவன் கொடுத்த வரத்தை சோதிக்க வேண்டாமோ! என்று நினைத்த அசுரன் தனது முதல் சோதனையை வரம் கொடுத்த சிவன் மீது நடத்த முற்பட்டான்.

நிலைமையைப் புரிந்துகொண்ட சிவன் வேகமாக ஓடத் தொடங்கினார்.

அசுரனும் சிவனைத் துரத்தினான். அசுரனின் பிடியிலிருந்து தப்புவதற்கு சிவன் கண்ணனின் உதவியை நாடவேண்டியிருந்தது.

இதுபோலத்தான் எங்கள் நாட்டு கிறீஸ் பூதத்தின் கதையும் இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஏதோ நினைத்து கிறீஸ் பூதத்தைப் படைத்துவிட, அதனால் மக்கள் கிளர்ந்தெழ, கிறீஸ் பூதம் தன்னைப் படைத்தவனைப் பதம் பார்க்க நினைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அந்தச் சிவனுக்கே அப்படியென்றால் இந்த 'சி'களுக்கு எப்படியிருக்கும்.

சிவனுக்கு கண்ணன் உதவினான். இந்த 'சி'களை சீனாவாலும் காப்பாற்ற முடியாது.

# தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

(மன்னார்)

சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்படுத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக அதி வணக்கத் திற்குரிய கர்தினால் மல்கம ரஞ்சித் ஆண்டகை எச்சரிக்கை விடுத்துள்ளார். மன்னார் மருத மடு தேவாலய திருவிழா திருப்பலியில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகத்தினால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை சரியான முறையில் எதிர்கொள்ளக் கற்றுக்கொள் வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். சகல விடயங்களையும் நிராகரிக்க முடியாது எனவும் அவ்வாறு செய்தால் உலகின் சிறிய நாடொன்றைச் சேர்ந்த நாம் தனிமைப்படுத்தப்படுவதனை தடுக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். ஆயுதப் போராட்டம் முடிபுறுத்தப்பட்டுள்ள போதிலும் தேசிய சுய நலவாதத்திற்கு எதிராக யுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். ஆயுதப் போராட்டத்தை விடவும் இந்த யுத்தம் மிகவும் சவால் மிக்கது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள் குறித்து தெற்கு சிங்கள மக்கள் கவனம் செலுத்தவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். 07 நாட்கள் நடைபெற்ற மருதமடு தேவாலய திருவிழா நிகழ்வுகளில் சுமார் 02 இலட்சம் பக்தர்கள் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பான்மை மக்களுக்கு சிறுபான்மையினர் சவாலாகத் திகழ்வார்கள் என்ற நிலைப்பாட்டில் மாற்றம் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியில் ஐக்கியப்பட்டுள்ள நாம் இதய ரீதியாக பிளவடைந்திருப்பதாகவும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்கக் கூடிய வகையில் சிங்கள மக்கள் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படாவிட்டால் மற்றுமொரு யுத்தம் ஏற்படுவதனை தடுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே இந்தியப் பொலிஸாரால் கைது



(டில்லி)

இந்தியாவில் தடையை மீறி உண்ணாவிரதம் இருக்க முற்பட்ட சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே நேற்று காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உண்ணாவிரத இடத்திற்கு செல்வதற்கு முன்பாக டில்லி பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

அன்னா ஹசாரேவோடு சமூக ஆர்வலர்கள் அரவிந்த் கேஜரிவால் கிரண் பேடி மற்றும் மனீஷ் சிசோதியா ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

வலுவான லோக்பால் மசோதாவை உருவாக்கக் கோரி நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாக சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே அறிவித்திருந்தார். டில்லியில் ஜந்தர் மந்தர் அருகே அவர் உண்ணாவிரதம் இருக்க அனுமதி கோரியிருந்தார். எனினும் டில்லி கிரிக்கெட் மைதானம் அருகே உள்ள ஜெயபிரகாஷ் நாராயண் மைதானத்தில் உண்ணாவிரதம் இருக்க டில்லி பொலிஸ் அனுமதி அளித்தது. மேலும் உண்ணாவிரதம் தொடர்பாக 22 நிபந்தனைகளையும் விதித்திருந்தது.

இதில் 6 நிபந்தனைகளை அன்னா ஹசாரே குழு ஏற்கவில்லை. இதையடுத்து உண்ணாவிரதம் நடந்த டில்லி பொலிஸ் அனுமதி மறுத்தது மேலும் ஜெயபிரகாஷ் நாராயண் மைதானத்தை சுற்றியுள்ள பகுதியில் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. உண்ணாவிரதத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது சட்டவிரோதமானது என்று கூறிய அன்னா ஹசாரே தடையை மீறி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்திருந்தார். அதன்படி நேற்று காலை அவர் உண்ணாவிரதப் போராட்டத்திற்காக தயாராகி கொண்டிருந்தார்.

கிழக்கு டில்லியில் அவர் தங்கியிருந்த குடியிருப்பு பகுதியில் நூற்றுக்கணக்கான சமூக ஆர்வலர்கள் திரண்டிருந்தனர்.

இதனிடையே உண்ணாவிரத இடத்திற்கு அவர் செல்வதற்கு முன்பாகவே டில்லி பொலிஸார் அவரை கைது செய்தனர். (ஸ்ரீ-2)

## துறைநீலாவணை கிராமத்தில் 3 இளைஞர்கள் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணை கிராமத்தில் தாக்குதலுக்குள்ளான மூன்று இளைஞர்கள் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

துறைநீலாவணைக் கிராமத்தில் சந்தேகத்திற்கிடமான மனிதர்களை கிராம மக்கள் துரத்திச் சென்றதாகவும் இந்நிலையில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மூவரும் மற்றும் ஏனைய கிராம இளைஞர்கள் மூவரும் ஓரிடத்தில் நின்று நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்த சமயம் அவர்கள் பிரதேச பாதுகாப்பு தரப்பினரால் தாக்குதலுக்குள்ளானதாக தெரியவருகின்றது.

இவர்களை பாராளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா மற்றும் பா.அரியநேத்திரன் ஆகியோர் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## அளவுக்கதிகமாக கள் வைத்திருந்த ஐவருக்கு 3 ஆயிரம் ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

1500 மில்லிலீற்றருக்கு அதிகமான கள்ளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் 5 பேர் யாழ். மதுவரி பரிசோதகர்களால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு நான்கு பேருக்கு தலா 500 ரூபாயும் ஒருவருக்கு ஆயிரம் ரூபாயும் அபராதம் விதித்ததுடன் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித்தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

## மகாதேவா ஆச்சிரமத்துக்கு நெல்மூடை அன்பளிப்பு

(பூநகரி)

பூநகரி கமநலச் சேவை நிலைய எல்லைக்குள் உள்ள சின்னப்பல்லவராயன் கட்டுகுளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையை மேற் கொண்ட 350க்கு மேற்பட்ட பூநகரி விவசாயிகள் தமது விளைச்சலில் இருந்து தலா ஒரு மூடை நெல்வீதம் 350 மூடை நெல்லை கிளிநொச்சியில் இயங்கும் மகாதேவா சைவச்சிறார் ஆச்சிரமத்திற்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளார்கள்.

இதற்குரிய தீர்மானம் கடந்தவாரம் பூநகரி கமநல சேவைநிலையத்தில் நடைபெற்ற 20 கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாதாந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-84)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் ஆசிமொழிகள்



எல்லோரும் முக்தர்கள் ஆகட்டும். அதாவது தாங்கள் முக்தர்கள் என்பதை உணரட்டும் என்று பிரார்த்திக்கிறேன். அவர்கள் மீண்டும் கனவு காண்பதனால் அவர்களது கனவுகள் எல்லாம் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த கனவுகளாக இருக்கட்டும் என்று நாம் பிரார்த்திப்போம்.

பக்தியைப் பற்றிக் கொள், நான் உன் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளேன் என்பதை எண்ணி, சலனமின்றி இரு. இதையும் அதையும் எண்ணி மனத்தை சஞ்சலப்படுத்தாதே. ஸ்ரீ இராமகிருஷ்ணரைப் பிரசாரம் செய். உன் தாகத்தைத் தணித்த பாத்திரத்தைப் பிறருக்குக் கொடு. வாழ்வின் இலட்சியம் உனக்குக் கைகூடட்டும். இது எனது ஆசீர்வாதம்.

தத்துவம், அது இது என்று பொருளற்ற குப்பைகளால் உன் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே, உனது கொள்கை வெறியால் பிறரைக் குழப்பாதே. நீ செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று -ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரசாரம் செய், பக்தியைப் பிரசாரம் செய் வேலைசெய்து கொண்டே போ- இதற்காக உன்னை நான் ஆசீர்வதிக்கிறேன். எம் பெருமானின் திருநாமத்தைப் பிரசாரம் செய்யப்பா!




# வடிவமைத்து பிரபல்யமடையுங்கள்

## இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் அடையாளங்களை பிரதிபலிக்கின்ற விதத்தில் புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி

இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தனித்துவ அடையாளங்களை நேர்த்தியாக உருவமைக்கும் தகுதியைக் கொண்ட படைப்பாற்றல் மிக்க கலைஞர்களுக்கு இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் அடையாளங்களை பிரதிபலிக்கின்ற விதத்தில் புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைத்து பெயரையும் புகழையும் ரூ.50,000 காசுப் பரிசினையும் பெற்றுக் கொள்வதற்கான அழைப்பினை இலங்கை மத்திய வங்கி விடுக்கிறது.

போட்டிக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் பின்வருமாறு இருக்கும்:

1. வடிவமைப்புக்களை இலங்கையின் 25 மாவட்டங்களில் விரும்பிய ஏதேனும் மாவட்டம்/ மாவட்டங்களுக்காக சமர்ப்பிக்கலாம். அத்துடன், வடிவமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட மாவட்டத்துடன் சேர்ந்து வரையப்பட்ட தோற்றம் அல்லது தொனிப் பொருளும் அத்தகைய தெரிவிற்கான அடிப்படையும் தெளிவாக எடுத்துக்காட்டுப்படுதல் வேண்டும்.
2. வடிவமைப்புக்கள் 2009ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு தற்பொழுது சுற்றோட்டத்திலுள்ள ரூ.10 நாணயக் குத்தியினையொத்த நாணயக் குத்தியின் முன்புறத்திற்காக (முன்பக்கம்) மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
3. அனைத்து வடிவமைப்புக்களும் கறுப்பு வெள்ளையில் இருத்தல் வேண்டும். நிறத்திலமைந்த வடிவமைப்புக்கள் நிராகரிக்கப்படும்.
4. வடிவமைப்புக்கள் A4 அளவு தாளில் 18 செ.மீற்றர் விட்டத்தில் அமைந்த வட்ட வடிவமொன்றில் வரையப்படுதல் வேண்டும். வடிவமைப்புக்கள் 26.4 மி.மீற்றர் விட்டத்தினைக் கொண்ட நாணயக் குத்திக்கு பொருத்தமானவையாக இருத்தல் வேண்டும்.
5. எனினும், ஒவ்வொரு வடிவமைப்புடனும்/ வடிவமைப்புக்களுடனும் இவ்விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டவாறு வடிவமைப்பாளரினால் செய்யப்பட்ட பிரகடனமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பூரணமாக நிரப்பப்பட்ட பிரகடனம் இணைக்கப்பட்டிராத எந்தவொரு வடிவமைப்பும் நிராகரிக்கப்படும்.
6. வடிவமைப்பானது, வடிவமைப்பாளரின் அடையாளத்தினை எடுத்துக்காட்டக் கூடிய ஏதேனும் அடையாளம், தொடர்பு அல்லது இலச்சினை எதனையும் கொண்டிருக்கக்கூடாது.
7. ஒவ்வொரு வடிவமைப்பும் வடிவமைப்பாளரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டியதுடன் ஏற்கனவேயுள்ள மற்றைய ஏதேனும் வடிவமைப்பிலிருந்து எடுத்தாளப்பட்டதாக இருக்கக்கூடாது. வடிவமைப்பாளர் இதனை இவ்வறித்தலில் தரப்பட்டுள்ள பிரகடனப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. பரிசு பெறுகின்ற வடிவமைப்புக்கள், இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட குழுவின் விதந்துரைப்புக்களை பரிசீலித்ததன் பின்னர் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் தெரிவு செய்யப்படும்.
9. வெற்றி பெறும் ஒவ்வொரு வடிவமைப்பாளருக்கும் ரூ.50,000 பணப் பரிசு வழங்கப்படும்.
10. சமர்ப்பிக்கப்பட்டு, தெரிவு செய்யப்படாத வடிவமைப்பிற்கு இலங்கை மத்திய வங்கி எந்தவொரு கொடுப்பனவினையும் செய்யமாட்டாது.
11. இலங்கை மத்திய வங்கியினால் வடிவமைப்பானது தெரிவு செய்யப்பட்டதும் அவ்வடிவமைப்பு இலங்கை மத்திய வங்கியின் புலமைச் சொத்தாக மாறி விடுவதுடன் வங்கி அதன் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான விதத்தில் வடிவமைப்பினை அத்துடன்/ அல்லது வங்கியினால் இறுதியாக மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய முழு தொனிப்பொருளையும் திருத்துவதற்குமான உரிமையையும் அதிகாரத்தினையும் கொண்டிருக்கும்.
12. போட்டியாளரின் தனிப்பட்ட தகவல்களை, அஞ்சல் முகவரி, தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் (கிடைக்கத்தக்கதாக இருப்பின்) என்பனவற்றுடன் சேர்த்து ஒவ்வொரு வடிவமைப்புடனும்/ வடிவமைப்புக்களுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
13. அனைத்து வடிவமைப்புக்களும் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 07.10.2011 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் வரவேற்புப்பீடத்தில் நேரடியாகக் கையளிக்கப்படுதல் வேண்டும்.
14. வடிவமைப்பினைக் கொண்டுள்ள தாளினை மடிக்கக்கூடாது. இதனை பொருத்தமான கடித உறையிலிட்டு பாதுகாப்பான முறையில் சீல் இட்டு 'புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி' என கடித உறையின் இடதுபக்க மேல் முலையில் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
15. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும். தெரிவு செய்யப்படாத வடிவமைப்பாளர்களுக்கும் அறிவிக்கப்படும்.
16. சமர்ப்பிக்கப்பட்ட வடிவமைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற அல்லது நிராகரிக்கின்ற உரிமையினை மத்திய வங்கி கொண்டுள்ளதுடன், அனைத்து வடிவங்களையும் நிராகரிப்பதென தீர்மானிக்குமிடத்து அவற்றை நிராகரிக்கும் உரிமையினையும் கொண்டிருக்கும்.

### வடிவமைப்பாளரின் பிரகடனம்

புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி

பெயர்: ..............................................................................................

முகவரி:............................................................................................

..........................................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம்:......................................................

தொலைபேசி:........................................ மின்னஞ்சல்:..................................

செல்லிடத்தொலைபேசி:..............................................

நான் மேலே குறிப்பிட்ட போட்டிக்காக ............... வடிவமைப்பினை /வடிவமைப்புக்களை சமர்ப்பித்திருக்கின்றேன் என்பதனை இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

அ. என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு/ வடிவமைப்புக்கள் எனது சொந்தப் படைப்பு/ படைப்புக்களாகும்.

ஆ. இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு/ வடிவமைப்புக்கள் தொடர்பான அனைத்து உரிமைகளையும் இலங்கை மத்திய வங்கியிடம் கையளிக்க உடன்படுகின்றேன்.

இ. வடிவமைப்பினை இறுதிப்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கி அதன் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமாக எனது வடிவமைப்பினை அல்லது அதன் ஒரு பகுதியினை மாற்றுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

ஈ. எனது வடிவமைப்பு தெரிவு செய்யப்பட்டாலொழிய எனக்கு எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது என்பதனை நானறிவேன். ஆகவே, எனது வடிவமைப்பு தெரிவு செய்யப்படாவிடின் செலவுகளாக அல்லது கட்டணமாக எந்தவொரு தொகையினையும் கோரமாட்டேன்.

........................................ ........................................

கையொப்பம் திகதி

முக்கியம்: அனைத்து வடிவமைப்புக்களுடனும் வடிவமைப்பாளரின் பிரகடனம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உங்கள் வடிவமைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:
நாணயக் கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

விசாரணை:
தொலைபேசி: 2477355, 2477603, 2477014, 2477364
மின்னஞ்சல்: currency@cbsl.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# தரங்க, மலிங்க ஜொலிப்பு

# இலங்கை தீர்க்கமான வெற்றி

(அம்பாந்தோட்டை)

தரங்க, மலிங்கவின் அபார ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

எனினும் அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 2 இருபது-20, 5 ஒரு நாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் 2 இருபது-20 போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்ற நிலையில் தொடர்ந்து நடைபெற்ற 2 ஒரு நாள் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்று தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இத்தொடரின் மூன்றாவது ஒரு நாள் போட்டி நேற்று அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பெடுத்தாட இலங்கை அணியை அழைத்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தரங்க -டில்ஷான் ஜோடி பலமான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 25.1 ஓவர்களில் 139 ஓட்டங்களைச் சேர்த்த போது அணித் தலைவர் திலகரட்ன டில்சான் 59 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய சங்கக்கார சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் உபுல் தரங்க 128 பந்துகளில் சதமடித்து அசத்தினார்.

இதில் குமார் சங்கக்கார 37 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 49 ஓட்டங்களுடனும் அடுத்து வந்த சாண்டீமல் 4 ஓட்டங்களுடனும் உபுல் தரங்க 139 பந்துகளில் (12 பவுண்டரிகள் உட்பட)111 ஓட்டங்களுடன் பொல்லிங்கரின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

பின்வரிசை வீரர்களும் சோபிக்கத் தவற, இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளையிழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மஹேல ஜெயவர்த்தன 36 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பொல்லிங்கர் 4 விக்கெட்டுகளையும் ஜோன்சன், வோட்ஷன் தலா 2 விக்கெட்டுகளையும் பிரெட் லீ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 287 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்ப ஜோடி வோட்ஷன், ஹடின் தலா 5 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

அடுத்து இணைந்த பொன்டிங் -மைக்கெல் கிளார்க் ஜோடியும் நீண்ட நேரம் நீடிக்கவில்லை.

இதில் ரிக்கி பொண்டிங் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

இந்நிலையில் கிளார்க்குடன் இணைந்த மைக்கெல் ஹசி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இதில் அணித் தலைவர் மைகெல் கிளார்க் 67 பந்துகளில் (3 பவுண்டிரிகள் உட்பட)46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் சொதப்பலான ஆட்டத்தை வழங்க அவுஸ்திரேலிய அணி 44.2 ஓவர்களில் 208 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுகளையுமிழந்தது.

இதன்மூலம் இலங்கை அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தீர்க்கமான வெற்றியைப் பெற்று தொடரை 1:2 என்ற கணக்கில் தக்கவைத்தது.

துடுப்பாட்டத்தில் மைக்கெல் ஹசி 76 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 63 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் லசித் மலிங்க 8.2 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும் இரங்க 2 விக்கெட்டுகளையும் குலசேகர, அஜந்த மெண்டிஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு ஜொலித்த தரங்க ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.




# பங்களாதேஷ் போராடித் தோல்வி

# சிம்பாவே அணி வசமானது தொடர்

(ஹராரே)

ரகீம் சதமடித்து போராடியும் பங்களாதேஷ் அணி மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் 5 ஓட்டங்களால் சிம்பாவே அணியிடம் தோல்வியடைந்தது.

இதன்மூலம் சிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரேயொரு டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற சிம்பாவே அணி தொடர்ந்து நடைபெற்ற 2 ஒரு நாள் போட்டிகளிலும் வெற்றி பெற்றது.

இந்நிலையில் 3-வது ஒரு நாள் போட்டி நேற்று ஹராரேயில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித் தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களை எடுத்தது.

இதில் தைபு 103 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 83 ஓட்டங்களையும் மஷகட்சா 100 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 74 ஓட்டங்களையும், சிக்கும்புரா 31, சிபண்டா 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரூபேல் ஹுசைன், அணித் தலைவர் சகிப் அர் ஹசன் தலா 2 விக்கெட்டுகளையும் இஸ்லாம், நாஸ்முல் ஹுசைன், மாமுடுல்லா தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்காளதேஷ் அணி ரகீம் சதமடித்து போராடிய போதும் 49.2 ஓவர்களில் 245 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் முஷ்பிகர் ரகீம் 100 பந்துகளில்(8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 101 ஓட்டங்களையும், தமீம் இக்பால் 44, ஹோம் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் உற்சயா 3 விக்கெட்டுகளையும், ஜார்விஸ், மோபு தலா 2 விக்கெட்டுகளையும் , விடோரி ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் சிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இப்போட்டியில் சிறப்பாக ஜொலித்த முஷ்பிகர் ரகீம் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

# இலக்குகளை நிர்ணயிப்பதற்கு

# தவறிய இந்திய அணி வீரர்கள்

## ஊடகங்கள் சாடல்

(லண்டன்)

டெஸ்ட் அரங்கில் நம்பர்-1 இடத்தை தக்கவைத்துக் கொள்வதற்கான புதிய இலக்குகளை இந்திய அணி நிர்ணயித்துக் கொள்ளவில்லை. இதன் காரணமாகவே மிகப் பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இவ்வாறு இந்திய ஊடகங்கள் விமர்சித்துள்ளன. இது தொடர்பில் அவை வெளியிட்டுள்ள பத்தியில்,

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் 3 டெஸ்ட்டில் வரிசையாக தோல்வி அடைந்த இந்தியா, தொடரை இழந்ததோடு, டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தையும் கோட்டை விட்டது. இங்கிலாந்து முதலிடத்துக்கு முன்னேறியது.

**புள்ளிகள் குறைவு**

கடந்த 2009, டிசம்பர் 6-ம் திகதி தொனி தலைமையிலான இந்திய அணி டெஸ்ட் தரவரிசையில் முதல் முறையாக முதலிடம் பெற்றது.

அடுத்த 20 மாதங்களில் தென் ஆபிரிக்காவுடனான தொடரை சமனிலை செய்தது. சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு எதிரான தொடர்களை வென்றது.

பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள் மண்ணிலும் வெற்றிவாகை சூடியது. இந்த தொடர்களின் போது இந்திய வீரர்கள், போதும் என்ற மன நிறைவோடு காணப்பட்டனர். வெற்றி தாகம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது.

உதாரணமாக மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் 15 ஓவரில் 85 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலை காணப்பட்டது.

கைவசம் 7 விக்கெட்டுகள் இருந்ததால், எளிதாக வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் தொடரில் 1:0 என்ற முன்னிலையில் இருந்ததால் போட்டியைத் வீணாக சமநிலை செய்தனர்.

இதனால் தரவரிசைப் பட்டியலில் வீணாக புள்ளிகளை இழந்தது.

**திட்டம் இல்லை**

இந்திய அணியின் சரிவுக்கு சரியாக திட்டமிடாததும் முக்கிய காரணம். நம்பர்-1 இடத்தை பெறுவதைக் காட்டிலும்; அதனை தக்கவைப்பதே மிகவும் கடினம் என்பதை அறிந்து கொள்ள இந்திய வீரர்கள் தவறினர்.

முதலிடத்தில் இருக்கிறோம் என்ற மிதப்பில் இருந்தனர். அடுத்து நாம் என்ன செய்யப் போகிறோம், எத்தனை வெற்றிகளை பெறப் போகிறோம் என புதிய இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ளவில்லை.

தவிர ஏதாவது ஒரு வீரரை தான் பெரிதும் சார்ந்து இருந்தது. இலங்கை, தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர்களை சமனிலை செய்ய லக்ஸ்மன் காரணமாக இருந்தார்.

இவரது சிறப்பான ஆட்டம் அணிக்கு பெரிதும் கைகொடுத்தது. இத்தகைய ஒரு வீரர் இங்கிலாந்து தொடரில் கிடைக்கவில்லை.



டிராவிட் இரண்டு சதம் அடித்த போதும் அது அணியின் தோல்வியை தவிர்க்க உதவவில்லை.

இந்திய அணியில் கூட்டு முயற்சியும் காணப்படவில்லை. இந்திய வீரர்கள் 80 முதல் 70 சதவீதம் வரை இந்திய மண்ணில் தான் விளையாடுகிறார்கள். இதனால்தான் வெளிநாடுகளில் சோபிக்க முடியவில்லை என்கிறார் தோனி.

இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் ஹெடிங்லி, பேர்த், ஜமைக்கா போன்ற இடங்களில் இவரது தலைமையில்தான் இந்தியா வெற்றி பெற்றது.

டிராவிட், சச்சின், லக்ஸ்மன், சகீர் கான் போன்றவர்கள் ஓய்வு பெறும் பட்சத்தில் அவர்களுக்கு நிகரான மாற்று வீரர்கள் இல்லை.

இந்திய அணி இழந்த பெருமையை மீட்க, குறைந்த பட்சம் 4 ஆண்டுகள் தேவைப்படலாம். இந்த காலகட்டத்தில் புதிய இலக்குகளை நிர்ணயித்து, டெஸ்ட் அரங்கில் மீண்டும் எழுச்சி பெற தீவிரமாக முயற்சிக்க வேண்டும்.

# இளையோர் உலகக் கிண்ண கால்பந்து;

# பிரேசில், பிரான்ஸ் அரையிறுதியில்

உலகக் கிண்ண கால்பந்து (20 வயதுக்குட்பட்டோர்) தொடரின் அரை யிறுதிக்கு பிரேசில், பிரான்ஸ் அணிகள் முன்னேறின.

கொலம்பியாவில் பிபா 20 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

இதன் காலிறுதியில் பிரேசில், ஸ்பெயின் அணிகள் மோதின. போட்டியின் முடிபில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து இருந்ததால், ஆட்டம் கூடுதல் நேரத்துக்கு சென்றது.

இதில் இரு அணியினரும் தலா ஒரு கோல் அடித்தனர். இதனால் போட்டி 2:2 என சமநிலை அடைந்தது. இதையடுத்து போட்டியின் முடிபு பெனால்டி ஷூட் அவுட் முறைக்குச் சென்றது.

இதில் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரேசில் அணி 4:2 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

**பிரான்ஸ் அபாரம்**

மற்றொரு காலிறுதியில் பிரான்ஸ்-நைஜீரியா அணிகள் மோதின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரான்ஸ் அணி கூடுதல் நேரத்தில் முடிபில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இதையடுத்து இன்று நடக்கும் அரையிறுதிப் போட்டிகளில் பிரான்ஸ்-போர்த்துகல், பிரேசில்-மெக்சிகோ அணிகள் மோதவுள்ளன.




## சண்டே லீடர் பத்திரிகையின் செய்தியால்

# ராஜபக்ஷ குடும்பத்தின் கௌரவத்திற்கு இழுக்கு

## கோத்தபாய நீதிமன்றில் சாட்சியம்

(கொழும்பு)

இராணுவத்திற்கான மிக் விமானக் கொள்வனவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக சன்டே லீடர் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்திக்கு எதிராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கல்கிசை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது மன்றில் ஆஜரான பாதுகாப்புச் செயலாளர் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரையில் சாட்சியமளித்தார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்ட இந்தச் செய்திக்கு எதிராக கல்கிசை நீதிமன்றில் மான நஷ்ட வழக்கு தாக்கல் செய்த பாதுகாப்புச் செயலாளர் மேற்படி செய்தியால் தனக்கு அவமானம் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கு நட்டஈடாக 100 கோடி ரூபாயினை சன்டே லீடர் நிறுவனம் வழங்க வேண்டும் எனவும் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் கல்கிசை மாவட்ட நீதிவான் பீ.எஸ்.மொராயஸ் முன்னிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஆஜரான பாதுகாப்புச் செயலாளர் தனது சாட்சியத்தை பொதுமக்களின் நன்மதிப்பு மற்றும் கௌரவத்தைப் பெற்றுக்கொண்ட பரம்பரை என்ற பெயர் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு உண்டு. இருப்பினும் எமது குடும்பத்தை இழிவுபடுத்தும் வகையில் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்தச் செய்தியினால் இராணுவத்தினர் பலவீனமடைந்தனர் என்று தனது இரண்டு மணித்தியால சாட்சியத்தின்போது அவர் குறிப்பிட்டார். (ந-5)

# தீவிரமாகும் உணவுப் பிரச்சினை

## உலக வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

உணவுப் பொருட்களின் விலை மிகவும் உயர்வாகவும், ஸ்திரமற்ற நிலையிலும் தொடர்வது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள வறிய மக்களுக்கு ஆபத்தாக அமையும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

சராசரி உணவு விலையானது கடந்த பெப்ரவரியில் மிகவும் கடுமையாக அதிகரித்திருந்ததை விட சிறிதளவு குறைவாகவே இப்போது இருக்கின்ற போதிலும் ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்ததை விட மூன்றில் ஒரு மடங்கு அதிகமாக அது இருக்கிறது என்றும் உலகவங்கி அறிக்கை கூறுகிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உணவு விலை அதிகரிப்பும் தளம்பலும் வளரும் நாடுகளின் வறிய மக்களுக்கு ஆபத்தாக உருவெடுக்கின்றது.

சோளத்தின் விலை 84 வீதத்தாலும், கோதுமையின் விலை 55 வீதத்தாலும் அதிகரித்துள்ளது.

உலக உணவுக் கையிருப்பு மிகவும் மோசமான அளவுக்கு குறைந்துள்ளது. இது ஸ்திரமற்ற தன்மையையும், விலைத் தளம்பலையும் ஊக்குவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ஐக்கிய நாடு...

னிப்பாக அவதானித்து அவற்றின் நிலைப்பாடுகளை வெளியிடும் எனவும் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## யாழ்.பஸ் நிலை...

கவியலாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ந-5)

## மாலைதீவு ஜனாதி...

விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார்.

இவ் விஜயத்தின் போது மாலைதீவு ஜனாதிபதி தங்கியிருக்கும் இரண்டு நாட்களில் அரசியல் பிரமுகர்களையும் சந்தித்துப் பேச்சு வார்த்தையில் ஈடுபடவுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ந-5)

## கிறீஸ் பூதம் பின்னணியில்...

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் கிறீஸ் பூதம் களேபரத்தை இட்டு கருத்துத் தெரிவித்த மங்கள சமரவீர மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளை வாகனங்களைக் கொண்டு முன்னர் பொதுமக்களை அச்சுறுத்தி வந்த படைத்தரப்பின் புலனாய்வுத்துறையினர் தற்போது மர்ம மனிதர்கள் எனும் பேரில் பொதுமக்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

மர்ம மனிதர்கள் என பொதுமக்களால் பிடிக்கப்பட்டவர்கள் அனைவரும் படைத்தரப்பின் புலனாய்வுத் துறையினர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மர்ம மனிதர்களில் பலரும் தாம் சிறிலங்கா படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காட்டியதும் அவர்கள் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

கிராமங்கள் தோறும் படை முகாம்களை அமைப்பதற்காகவே படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு செயற்படுகின்றார்.

அத்துடன் இப்பிரச்சினையை காரணம் காட்டி ஏற்கெனவே படைத்தரப்பைச் சேர்ந்த 5 ஆயிரம் படையினர் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ந-5)

## பொலிஸ் காவலர...

பினர் கிருபைராஜா மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளதுடன் மர்ம மனிதர்களின் நடமாட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் சேத்துக்குடா பொலிஸ் காவலரணிலுள்ள அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்யுமாறும், அக் காவலரணிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் புகைப்படங்களை காவலரணிற்கு முன்பாக காட்சிக்கு வைக்குமாறும் கோரிக்கை விடுத்து கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் மர்ம மனிதர்கள் விமான நிலையம், சேத்துக்குடாப் பொலிஸ் காவலரண் ஆகியவற்றுக்குள் தப்பிச் சென்று ஒளித்துக்கொள்கின்றனர் எனவும், ஊரின் மத்தியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரணை உடனடியாக அகற்றுமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், சி.யோகேஸ்வரன் ஆகியோர் பொலிஸாரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய ஆர்ப்பாட்டம் நடந்த இடத்திற்கு மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்ட தலைமையிலான பொலிஸார் சமுகமளித்தனர்.

சேத்துக்குடாப் பகுதியில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் காணப்படுவதாகவும், அம் மர்ம மனிதர்கள் சேத்துக்குடாக் காவலரணுக்குள் ஓடி ஒளித்துக் கொள்வதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ள பொதுமக்கள், இவ்வாறு தமது பகுதிக்குள் புதிதாக நடமாடுபவர்களை அடையாளம் காணும் நோக்கில் சேத்துக்குடா பொலிஸ் காவலரணுக்கு முன்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களின் புகைப்படங்களை காட்சிக்கு வைக்குமாறும் சேத்துக்குடா பொலிஸ் காவலரணிலுள்ள அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்யுமாறும் கோரினர்.

பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக உத்தரவாதமளித்த மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்ட, சேத்துக்குடா காவலரணில் தமிழ் மொழி மூலமான பொறுப்பதிகாரியுடன் உரிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் எனவும் கூறினார்.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்ட இதற்கு இணக்கம் தெரிவித்ததை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ந-5)

## போர்க்குற்ற ஆதார...

இப் போரின்போது இடம்பெயர்ந்த இம் மக்கள் இன்னும் முகாம்களிலேயே இருக்கின்றனர். அவர்களிடம் தேவையான புகைப்படங்கள் மற்றும் விபரங்கள் அனைத்தையும் அவர் சேகரித்து வந்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக நம்பகமான சாட்சிகளை எமது ஆவணப்படம் வெளிப்படுத்தியுள்ளது.

இப் போரில் இலங்கைப் படையினர் சர்வதேசப் போர் நியமங்களையும் மனித குலத்திற்கு எதிரான சட்டங்களையும் மீறியுள்ளதாக அங்குள்ள தமிழ் மக்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர் என ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சியின் பிரதம ஆசிரியர் ராகுல் கன்வால் தெரிவித்துள்ளார்.

இதேவேளை போர்க்குற்ற ஆதாரங்கள் தொடர்பில் இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்தின் பிரதிபலிப்பு எவ்வாறு இருக்கும் என அவரிடம் கேட்கப்பட்டபோது,

நிகழ்வுகளை ஆதாரங்களுடன் வெளியிடுவதே தமது பணி. அதைத் தொடர்ந்து செய்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புக்களுக்கு இந்த ஆவணப்படத்தை காண்பித்துள்ளீர்களா என அவரிடம் கேட்கப்பட்டபோது,

அத்தகைய கோரிக்கைகள் எதுவும் இதுவரை வரவில்லை என கொழும்பு ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சியின் பிரதம ஆசிரியர் ராகுல் கன்வால் தெரிவித்துள்ளார். (ந-5)

**ஆட்கள் தேவை**

- பத்திரிகை மடிப்பவர்கள்
- ஒவ்செற் இயந்திரம் இயக்கும் பயிலுநர்கள்

நேரில் வரவும்.

**வலம்புரி**

இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

**தேவை**

வடமராட்சியில் பிரபல்யமான வீடியோ and போட்டோ நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள வீடியோ எடிட்டிங் (Video Editing) and போட்டோசொப் (Photoshop) தெரிந்தவர்கள் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0212262911
0777491922

(சி-4068)

**வேலையாள் தேவை**

அரச பணியாற்றும் குடும்பமொன்றுக்கு வீட்டுவேலைசெய்வதற்கு வேலையாள் (பெண்) தேவை.

தொடர்பு:0770711018

(C-3993)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.